# 4. கைத்தொழில்


## 4. 1 பொதுவான போக்குகள்

ஏற்றுமதி சார்ந்த மற்றும் உள்நாட்டுச் சந்தை சார்ந்த கைத்தொழில்கள் ஆகிய இரண்டினதும் கணிசமான விரிவாக்கத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் 1997இல் கைத்தொழில் துறை 10.3 சதவீதத்தினால் விரிவடைந்தது. தயாரிப்பில் மிகப் பெரிய துணைத்துறையாகிய புடவைகளும் ஆடைகளும் 19 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதனது பங்கு 1996இன் 4.5 சதவீதத்திலிருந்து 1997இல் 5.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. கடந்த நான்கு ஆண்டுகளிலும் கிட்டத்தட்ட 38 சதவீதத்தில் காணப்பட்ட கைத்தொழிலில் கூட்டிய பெறுமதியின் அதனது பங்கு 41 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஏனைய பல கைத்தொழில் நடவடிக்கைகளும் அதியுயர் வெளியீட்டு மட்டங்களைப் பிரதிபலித்தன. ஏனையவற்றில் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள், தீந்தை வகைகள், பால் உற்பத்திப் பொருட்கள், தேயிலை பதனிடல், குடிபானங்கள், இனிப்புப் பண்ட உற்பத்திகள், இறைச்சி உற்பத்திப் பொருட்கள், மின் உபகரணங்கள், மின்கலன்கள் மற்றும் இறப்பர் உற்பத்திப் பொருட்கள் என்பன இவ்வாண்டில் கணிசமாக உயர் வளர்ச்சி வீதங்களைக் காட்டியுள்ளன. 1997இன் மொத்த பொருளாதார வளர்ச்சியின் 29 சதவீதத்துக்கு தயாரிப்புத்துறை பங்களிப்புச் செய்தது. 1996இன் 7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் தனியார்துறையின் கைத்தொழில் வெளியீடு 12 சதவீதத்தினால் அதிகரித்தது. 470 நிறுவனங்கள் தொடர்பான மத்திய வங்கியின் கைத்தொழில் உற்பத்தி ஆண்டு அளவீடானது 1997இன் தனியார் முதலீட்டின் பொதுவான வளர்ச்சியுடன் இசைந்து செல்லும் வகையில் கைத்தொழில் துறையின் இயலளவு 5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளமையை எடுத்துக் காட்டியது. இதே அளவீட்டின் அடிப்படையில் 1997இல் கைத்தொழில் துறையின் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தொழிற்சாலை நிலை இலாப விகிதம் 1996இன் 14.9 சதவீதத்திலிருந்து 1997இல் 15.6 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.


முதலீட்டை ஊக்குவிக்கின்ற வகையில் கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் ஊக்குவிப்புக்களைப் பெறத் தகைமையுடைய கைத்தொழில்களின் உள்ளடக்கம் விரிவடைந்துள்ளது. இந்த ஊக்குவிப்புக்கள் முக்கியமாக வரி மற்றும் இறக்குமதித் தீர்வைச் சலுகை என்பனவற்றின் வடிவில் அமைந்தவையாகும். மேற்கத்திய நாடுகளில் இருந்து இலங்கையின் கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கு குறிப்பாக அணியும் பொருட்கள் மற்றும் புடவைகளுக்கான கேள்வி தொடர்ந்து அதிகரித்தது. 1997இல் தொழிலாளர் பிணக்குகளும் சார்புரீதியில் குறைவாகவே காணப்பட்டன. 1997 சனவரியிலும் மாச்சிலும் மத்திய வங்கியினால் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் குறைக்கப்பட்டமை, முதலீட்டுச் சபை அல்லாக்

**வரைபடம் 4.1**
**கைத்தொழில் உற்பத்திகளின் வளர்ச்சியும் உள்ளமைப்பும்**

வரைபடம் 4.1.1
கைத்தொழில் வெளியீடுகளின் வளர்ச்சி




வரைபடம் 4.1.2
கைத்தொழில் உற்பத்தியின் உள்ளமைப்பு - 1997




1. உணவு, குடிபானம், புகையிலை
2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள்
3. மர, மர உற்பத்திகள்
4. தாள், தாள் உற்பத்திகள்
5. இரசாயனம், பெற்றோல், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள்
6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள்
7. அடிப்படை உலோக உற்பத்திகள்
8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்
9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள்

கைத்தொழிலாளர்களுக்கான புதிய வெளிநாட்டு நாணய கடன் திட்டம், உள் நாட்டு மூலவளங்களுக்கான அரசின் கேள்வி குறைவடைந்தமை என்பன சார்பு ரீதியில் தாழ்ந்த வட்டி வீதங்களைப் பேணுவதற்கு உதவின. எனினும், இது கைத்தொழில் அதிபர்களினால் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்குக் குறைவானதாகக் காணப்படவில்லை. இவற்றுடன் இணைந்து முக்கிய பன்னாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் மிதமான பெறுமானத் தேய்வு என்பன கைத்தொழில் துறைக்கு உதவின. கிழக்காசிய நெருக்கடி 1997இல் இலங்கையின் கைத்தொழில் உற்பத்தியின் மீது சிறிதளவு தாக்கத்தினையே கொண்டிருந்தது. இதற்கு மேலதிகமாக நுகர்வோர் விலைகளின் அதிகரிப்பு வீதத்தின் வீழ்ச்சியும் போக்கும் கூலிக்கான அழுத்தத்தினைக் குறைத்து கைத்தொழில் துறைக்கு உதவியது. தனியார் துறையின் பங்கேற்பின் ஊடாக வலு மற்றும் தொலைத் தொடர்பு போன்ற உட்கட்டமைப்பு வசதிகளினதும் பயன்பாட்டுப் பணிகளினதும் அபிவிருத்தியினையும் உள்ளடக்கி தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் முதலீட்டாளர் நம்பிக்கையை மேம்படுத்தின. எனினும், உட்கட்டமைப்பு வசதிகள் குறிப்பாக பாதைகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பன போதுமான அளவு வளர்ச்சியடையாமையும் தொழிற்சந்தைக் கட்டுப்பாடுகளும் விரைந்த கைத் தொழில் வளர்ச்சிக்குத் தடையாகக் காணப்பட்டன. இடைக்காலத்தில் பொதுவான பொருளாதார வளர்ச்சியினை விரைவு படுத்துவதனை இயலச் செய்வதற்காக இந்த விடயங்கள் அவசர கவனத்தை ஈர்த்தல் வேண்டும்.

## 4. 2 உற்பத்தி

முதலீட்டுச் சபைசாராத 470 தொழில் முயற்சிகளை உள்ளடக்கி இலங்கை மத்திய வங்கி நடாத்திய ஆண்டுக் கைத்தொழில் அளவீடு, அரச துறை தொழில் முயற்சிகளின் செயலாற்றம் மற்றும் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்கள் தொடர்பான ஏற்றுமதித் தரவுகள் என்பனவற்றின்படி 1997இல் கைத்தொழில்துறை 10.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. நடைமுறை விலைகளில் மொத்தக் கைத்தொழில் வெளியீடு 16.5 சதவீதத்தினால் அதிகரித்தது. தொழிற்சாலைக் கைத்தொழில்களுக்கான உட்கிடைவிலைச் சுருக்கியில் 5.6 சதவீத மாற்றம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

1997இல் கைத்தொழில் வெளியீட்டில் ஏற்பட்ட வளர்ச்சியானது பெருமளவிற்கு புடவைகள் அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும், இரசாயனம் பெற்றோலியம் இறப்பர் பிளாத்திற்கு உற்பத்திகள் போன்ற மூன்று முக்கிய கைத்தொழில் வகைகளிலிருந்து பெறப்பட்டது. இம் மூன்று வகைகளும் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சியில் 85 சதவீதத்திற்குப் பங்களித்தன.

### தனியார்துறைக் கைத்தொழில்கள்

தனியார்துறைக் கைத்தொழில் வெளியீடு 1996இன் 6.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997இல் 12.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மொத்தக்

**அட்டவணை 4.1**

கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி
(1990 நிலையான விலைகளில்)

| வகை | ரூ. மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 (அ) | 1996 | 1997 (அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 28,304 | 30,445 | 33,641 | 35,908 | 37,146 | 6.7 | 3.4 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 45,540 | 48,333 | 55,480 | 58,332 | 69,269 | 5.1 | 18.7 |
| 3. மர, மர உற்பத்திகள் | 939 | 1,085 | 1,243 | 1,321 | 1,334 | 6.2 | 1.0 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 3,140 | 3,565 | 3,508 | 3,550 | 3,561 | 1.2 | 0.3 |
| 5. இரசாயனம், பெற்றோலியம்,இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 23,683 | 25,838 | 27,543 | 31,135 | 32,582 | 13.0 | 4.6 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 10,349 | 11,643 | 12,516 | 13,360 | 13,614 | 6.7 | 4.1 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,178 | 1,568 | 1,377 | 1,636 | 1,671 | 18.8 | 2.1 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 5,203 | 5,931 | 6,139 | 6,252 | 7,437 | 1.8 | 18.9 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 2,366 | 2,617 | 3,005 | 3,443 | 3,904 | 14.5 | 13.4 |
| மொத்தம் | 120,702 | 131,025 | 144,452 | 154,937 | 170,819 | 7.3 | 10.3 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை முதலீட்டுச் சபை

**அட்டவணை 4.2**

**தனியார்துறைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்**

1990 = 100

| வகை | ரூ. மிலலியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997(அ) | 1996 | 1997 (அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 129 | 140 | 155 | 166 | 171 | 6.9 | 3.4 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள | 168 | 179 | 206 | 217 | 257 | 5.1 | 18.7 |
| 3. மர, மர உற்பத்திகள் | 123 | 149 | 170 | 165 | 165 | (2.8) | (0.3) |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 226 | 263 | 266 | 279 | 286 | 4.7 | 2.8 |
| 5 இரசாயனம், பெற்றோலியம்,இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 132 | 159 | 196 | 224 | 257 | 14.2 | 14.9 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 159 | 212 | 228 | 243 | 254 | 6.6 | 4.4 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 225 | 266 | 305 | 351 | 359 | 15.2 | 2.1 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 124 | 141 | 147 | 150 | 178 | 1.8 | 18.9 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 152 | 168 | 193 | 221 | 250 | 14.5 | 13.3 |
| மொத்தம் | 155 | 172 | 192 | 205 | 230 | 6.9 | 12.1 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை முதலீட்டுச் சபை


கைத்தொழில் வெளியீட்டில் 93 சதவீதத்திற்கு வகைகூறியதாக மதிப்பிடப்பட்டுள்ளது.[1] இலங்கை முதலீட்டுச் சபையின் கீழான கைத்தொழில் தொழில் முயற்சிகள் 19.0 சதவீத வெளியீட்டு வளர்ச்சியினைக் காட்டின. முதலீட்டுச் சபைசாராத தொழில் முயற்சிகள் 5.2 சதவீத வெளியீட்டு வளர்ச்சியைக் காட்டின. புடவை, ஆடைகள், தோல் உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் மற்றும் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் என்பனவற்றின் மேம்பாடடைந்த செயலாற்றமே இவ் வளர்ச்சி வீதங்களுக்கு பொறுப்பாயமைந்தது. முதலீட்டுச் சபைசார்ந்த தனியார் துறையின் தொழில்நிலை 3.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இயலளவுப் பயன்பாட்டு வீதம் 1996இன் 83 சதவீதத்திலிருந்து 1997இல் 84 சதவீதத்திற்கு அதிகரித்தது. இத்துறையின் உற்பத்தி இயலளவு 5.1 சதவீதத்தினாலும் தொழிலாளர் உற்பத்தித்திறன் 2.9 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

## புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள்

புடவைகள் அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள்வகை 1996இன் 5.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1997இல் 18.7

1. முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லாத் இரண்டு துறைகளிலும் 100 முக்கிய தொழில் முயற்சிகளை உள்ளடக்கிய தனியார்துறை மாதாந்த உற்பத்திச் சுட்டெண் 1997 இல் 12.8 சதவீதங் கொண்ட உயர் வளர்ச்சியைக் காட்டியது.

**வரைபடம் 4.2**
**கைத்தொழில் உற்பத்தி பெறுமதி**
**(1990 நிலையான விலைகளில்)**




சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வகையின் 1992இன் பின்னரான அதிகூடிய ஆண்டு வளர்ச்சி வீதம் இதுவாகும். இவ்வகையில் மொத்த வெளியீட்டில் கிட்டத்தட்ட 88 சதவீதத்திற்கு வகைகூறிய முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகள் 19.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தவேளையில் முதலீட்டுச் சபைசாராத தொழில் முயற்சிகள் இவ்வாண்டில் 15.0 சதவீத வளாச்சியினைப் பதிவுசெய்தன. ஆதாரம் வழங்கும் உள்நாட்டுக் கொள்கையுடன் உற்பத்தித் திறன் மேம்பாடடைந்தமை, இயலளவின் விரிவாக்கம், அதிகரித்த வெளிநாட்டுக் கேள்வி என்பன இத்துறையின் விரிவாக்கத்துக்கான முக்கிய காரணங்களாக விளங்கின. தர மேம்பாடும், 1996இன் இடர் நிறைந்த நிலமைகளிலும் ஏற்றுமதிக் கட்டளைகள் உரிய நேரத்தில் ஒப்படைக்கப்பட்டமையும் இலங்கைப் பொருட்களுக்கான வெளிநாட்டுக்

கேள்வியின் உறுதியான வளர்ச்சியினைப் பேணுவதற்கு உதவின. 1997இல் புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் வகை தனியார்துறைக் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சியில் 69 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தது. இத்துணைத்துறை மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 41.7 சதவீதத்திற்கு வகைகூறியது.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகள் மற்றும் புடவைகள் ஏற்றுமதிகளின் முக்கிய கொள்வனவாளராக ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் திகழ்ந்தது. அது உலக ஆடைகளினதும் புடவைகளினதும் ஏற்றுமதிகளில் 25 சதவீதத்தை ஈர்த்துக்கொண்டது. 1997இல் ஐக்கிய அமெரிக்க சந்தையில் இலங்கையின் பங்கு 2.6 சதவீதமாகக் காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கையின் ஆடைகளினதும் புடவைகளினதும் மொத்த ஏற்றுமதிகள் 1996இன் 427 மில்லியன் சதுர மீற்றருக்குச் சமமான அளவிலிருந்து 1997இல் 479 மில்லியன் சதுர மீற்றருக்குச் 12.2 சதவீதத்தால் சமமான அளவிற்கு அதிகரித்தவேளையில் ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளிலான மொத்தப் பெறுமானம் கணிசமான விலை அதிகரிப்பினைக் குறித்துக்காட்டி 19.6 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏனைய அனைத்து மூலங்களிலிருந்தும் ஐக்கிய அமெரிக்காவிற்கான புடவைகளினதும் ஆடைகளினதும் அனைத்தையும் உள்ளடக்கிய இறக்குமதி விலையின் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது திருப்திகரமான முன்னேற்றத்தினைக் காட்டுகின்றது. அனைத்து நாடுகளிலுமிருந்தான ஐக்கிய அமெரிக்காவுக்கான புடவைகளினதும் ஆடைகளினதும் இறக்குமதிகளின் மொத்த அளவு 20.1 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் பெறுமானம் 17.6 சதவீதத்தினால் அதிகரித்து கிட்டத்தட்ட 2 சதவீதத்தினால் அலகொன்றின் விலை வீழ்ச்சியுற்றதனைக் குறித்துக்காட்டியது. அனுமதிப் பங்கின் கீழான ஆடைகளின் 14.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் அனுமதிப் பங்கின் கீழ்வராத வகைகளின் ஏற்றுமதி 20.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

1997இல் இலங்கைக்கான அனுமதிப் பங்கின் கிடைப்பனவானது ஐக்கிய அமெரிக்காவிற்கு 5.6 சதவீதத்தினாலும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு 11.4 சதவீதத்தினாலும், கனடாவிற்கு 1 சதவீதத்தினாலும் அதிகரித்து மொத்த அனுமதிப் பங்கின் கிடைப்பனவை 6.2 சதவீதத்தினால் உயர்த்தியது. ஐக்கிய அமெரிக்காவிற்கான அனுமதிப் பங்கினைப் பொறுத்தவரையில் பயன்பாடானது கூட்டிய பெறுமதி குறைவான விடயங்களிலிருந்து கூட்டிய பெறுமதி அதிகரித்த விடயங்களுக்கு மாற்றமடைந்தது. பெண்களுக்கும் சிறுமிகளுக்குமான நீண்ட முழு ஆடையும் தடித்த மேலங்கிகளும் மற்றும் குளிர் ஆடைகள் போன்ற உயர் பெறுமதி கூட்டப்பட்ட வகைகளின் ஐக்கிய அமெரிக்காவிற்கான அனுமதிப் பங்கு பயன்பாட்டு வீதம் 1997இல் கணிசமாக அதிகரித்த வேளையில் பாவாடை, உள்ளங்கிகள், தலையணை உறைகள் மற்றும் சாப்பாட்டு மேசைத் துவாய்கள் என்பனவற்றைப் பொறுத்தவரையில் பயன்பாட்டு வீதம் வீழ்ச்சியடைந்தது. இரவாடைகள், ஆண்களினதும் சிறுவர்களினதும் மேலங்கிகள், மேலுறைகள் மற்றும் பெண்களினதும் சிறுமிகளினதும் தடித்த மேலங்கிகள் ஆகிய அனுமதிப்பங்கு வகைகளின் தொடர்பில் அனுமதிப்பங்கு பயன்பாடு கிட்டத்தட்ட 100 சதவீதத்தினை அடைந்தது.

முன்னைய ஆண்டினைப் போன்றே ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அனுமதிப் பங்கு பயன்பாட்டு வீதம் பெண்களுக்கும் சிறுமிகளுக்குமான நெய்யப்பட்ட மற்றும் பின்னப்பட்ட மேலங்கிகள், ஆண்களுக்கும் பெண்களுக்குமான நீளக் காற்சட்டைகள் மற்றும் ஆண்களுக்கான கட்டைக் காற்சட்டைகள் என்பன தொடர்பில் உயர்வாகக் காணப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான அனுமதிப் பங்கின் கீழ்வராத விடயங்களின் ஏற்றுமதிகள் 1997இல் அதிகரித்தன. கனேடிய சந்தையினைப் பொறுத்தமட்டில் மழைக்கால ஆடை, பின்னப்பட்டதும் நெய்யப்பட்டதுமான ஆண் பெண் மேலங்கிகள் போன்றன மிகவும் பிரபல்யம்பெற்ற அனுமதிப் பங்கு வகைகளாக விளங்கின. கனேடியச் சந்தையில் தடித்த மேலங்கிகளுக்கும் அதிசிறந்த முழு ஆடைகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தில் தலைக்கவிகையுடனான நீண்ட குளிர் ஆடைகள் தலைக் கவிகையுடனான துருவ ஆடைகள் காற்றுத் தடுப்பு ஆடைகள் மற்றும் வெதுவெதுப்பான ஆடைகள் போன்றவற்றிற்கும் அனுமதிப் பங்குவகைகளின் பயன்பாட்டு வீதங்கள் குறைவாகக் காணப்பட்டன. இது குறைந்த விலைகளில் தேவையான தரத்தில் இப்பொருட்களை தயாரிப்பதற்கு இலங்கையில் போதுமான தொழில் நுட்பமும் தேர்ச்சியும் இல்லாத காரணத்தினால் ஏற்பட்டதாகும்.

உலக வர்த்தக அமைப்பு உடன்படிக்கைகளின்கீழ் 2005ஆம் ஆண்டில் அனுமதிப் பங்குமுறை அகற்றப்படுவதனைத் தொடர்ந்து சீனா, இந்தியா, பாகித்தான், வங்காளதேசம், வியட்நாம் மற்றும் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் போன்ற ஏனைய பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிடமிருந்து எழும் கடும் போட்டியினை எதிர்கொள்வதற்கு

இலங்கை தயாராயிருத்தல் வேண்டும். இலக்கிடப் பட்ட சந்தைகளில் மாறுபடும் தேவைப்பாடுகளுக்கு இணங்க அதனது மனித, பௌதிக, நிதியியல் மூலவளங்களை பொருந்தச் செய்து ஆடைகள் கைத்தொழிலானது அதனது செயல்திறனைத் தொடர்ந்து மேம்படுத்தல் வேண்டும். அபிவிருத்தி யடைந்த தொழில்நுட்பம், உற்பத்தித்திறன்மேம்பாடு மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி என்பவற்றிலான முதலீடுகள் அடுத்த சில ஆண்டுகளில் முன்னுரி மையைப் பெறவேண்டும். இவ்வறைகூவல்களை எதிர்கொள்வதற்காக ஏற்றுமதிக் கட்டளைகளுக்கு தரம்வாய்ந்த உற்பத்திப் பொருட்களை உரிய நேரத்தில் ஒப்படைப்பதன் மூலமும் முக்கிய வெளி நாட்டுக் கொள்வனவாளர்களுடன் வலிமையான நீண்ட கால உறவுகளை ஏற்படுத்திக்கொள்வதன் மூலமும் ஏற்றுமதிக் கேள்வியினை தக்கவைத்துக் கொள்வதற்கு தயாரிப்பாளர்கள் முயற்சிக்க வேண்டும்.

முதலீட்டுச் சபைக்குக் கீழான ஏற்றுமதிசார் புடவைத் தயாரிப்பாளர்கள் 1997இலும் தொடர்ந்து சிறப்பான செயலாற்றத்தைக் கொண்டிருந்தனர். குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் எனபனவற்றிலிருந்து நூல், பதனிடப்படாத புடவை மற்றும் மெருகூட்டப்பட்ட புடவை என்பனவற்றிற்கு அதிகரித்த கேள்வி காணப்பட்டது. பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி யதன் மூலம் உள்ளூர்க் கேள்வியினைக் கவர்வதில் வெற்றியடைந்த உள்ளூர் சந்தைக்கு வழங்கல் செய்யும்ஒருசில புடவை தயாரிப்பாளர்களின் விற்பனைகள் கணிசமாக அதிகரித்தன. எனினும், சில பாரிய புடவைத் தொழிற்சாலைகளில் நிலவிய தொழில் பிணக்குகளின் காரணமாக வெளியீடு வீழ்ச்சியடைந்தமை மற்றும் இறக்குமதிப் போட்டி என்பனவற்றின் காரணமாக உள்நாட்டு சந்தை சார் புடவைத்துறை பொதுவாக முன்னைய ஆண்டி னைப் போன்றே 1997இலும் வளர்ச்சி குன்றிக் காணப்பட்டது.

முதலீட்டுச்சபை நிறுவனங்களினால் குறிப் பாக மேற்கத்தைய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப் படும் பயணப் பொருட்கள், காலணிகள் மற்றும் ஏனைய தோல் உற்பத்திப் பொருட்கள் என்பன 1997இல் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைக் காட்டின.

### உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திகள்

இத் துணைத்துறை 1997இல் 3.4 சதவீத மிதமான வளர்ச்சியைக் காட்டியது. பழம் மற்றும் காய்கறி பதனிடல், இறைச்சி பதனிடல், விலங்குத்தீன், இனிப்புகளும் சாக்கலேட்டுக்களும், தேயிலை பதனிடல், குடிபானங்கள் மற்றும் தெங்கு பதனிடல் என்பனவற்றின் வெளியீடுகளில் அதிகரிப்புக் காணப்பட்டது. நீண்டகால வரட்சியின் காரணமாக 1996இல் இடர்பாடுகளுக்குள்ளான பழம் மற்றும் காய்கறி பதனிடல் கைத்தொழிலானது சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் அதிகரித்த உள்நாட்டுக் கேள்வி என்பனவற்றினால் பயனடைந்து 1997இல் கணிசமான மீட்சியினைக் காட்டியது. எனினும் பழம் மற்றும் காய்கறிகள் பதனிடல் கைத்தொழிலின் பாரிய விரிவாக்கமானது தரமான மூலப் பொருட்கள் கிடைக்காமை,

**அட்டவணை 4.3**

கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி
(நடைமுறை விலைகள்)

| வகை | ரூ. மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 (அ) | 1996 | 1997 (அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 39,709 | 45,054 | 54,927 | 68,209 | 75,,713 | 24.2 | 11.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 70,057 | 78,211 | 89,944 | 101,627 | 126,440 | 13.0 | 24.4 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,230 | 1,601 | 1,929 | 2,171 | 2,299 | 12.5 | 5.9 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 3,438 | 4,066 | 4,595 | 5,069 | 5,462 | 10.3 | 7.8 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 28,876 | 34,017 | 38,321 | 46,936 | 50,682 | 22.5 | 8.0 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 12,351 | 14,580 | 16,740 | 18,997 | 21,403 | 13.5 | 12.7 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,497 | 1,909 | 1,736 | 2,248 | 2,439 | 29.5 | 8.5 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 5,915 | 7,122 | 7,977 | 8,807 | 11,327 | 10.4 | 28.6 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 3,402 | 4,083 | 5,271 | 6,183 | 7,324 | 17.3 | 18.5 |
| மொத்தம் | 166,475 | 190,643 | 221,440 | 260,247 | 303,089 | 17.5 | 16.5 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை முதலீட்டுச் சபை

களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பன போதியளவில் இல்லாமை, வர்த்தக ரீதியிலான பயிர்ச் செய்கைக்கு காணி கிடைக்காமை, தாழ்வடைந்த உற்பத்தித்திறன் மற்றும் உயர் உற்பத்திச் செலவு என்பனவற்றினால் இன்னமும் கட்டுப்படுத்தப்படுகின்றது.

இறைச்சி உற்பத்திப் பொருட்களைப் பதனிடும் கைத்தொழில் 1996இன் பின்னடைவிலிருந்து முழுமையாக மீட்சிபெற்றது. மீன் வழங்கலில் ஏற்பட்ட பற்றாக்குறையின் காரணமாக 1997 இல் மீனின் விலைகள் உயர்வடைந்தமையானது பதனிடப்பட்ட இறைச்சி உற்பத்திகளுக்கான உள்நாட்டுக் கேள்வியினை அதிகரிக்கத் தூண்டியது. இவ்வாண்டில் பல்வேறு கொடுகடன் திட்டங்களின்கீழ் இத்துறைக்கு விரிவுபடுத்தப்பட்ட வங்கிக் கொடுகடனின் உதவியுடன் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் வளர்ச்சி ஏற்பட்டமையானது விலங்குத்தீன் கைத்தொழிலில் செழிப்பினை ஏற்படுத்தியது. குறிப்பாக சுயாதீன நாடுகளின் பொதுநலவாய ஒன்றியத்திலிருந்தான பொதியிலடைக்கப்பட்ட தேயிலை மற்றும் தேயிலைப் பைகள் என்பனவற்றிற்கான பெருமளவு கேள்வியின் காரணமாக இலங்கையில் பதனிடப்பட்ட தேயிலை ஏற்றுமதி 1997இல் அதிகரித்தது.

1996இல் பியர் மீதான உற்பத்தித் தீர்வை குறைக்கப்பட்டதனைத் தொடர்ந்து பியரின் விலைகள் குறைவடைந்து ஏனைய வெறியக் குடிவகைகளுக்கான கேள்வியை குறைவடையச் செய்தமையின் விளைவாக பியர் உற்பத்தி தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. நுகர்வோரின் விருப்புத் தேர்வானது பியர் மற்றும் இறக்குமதிசெய்யப்பட்ட வெறியக் குடிவகைகளுக்கு மாற்றமடைந்ததனால் உள்நாட்டு வெறியக் குடிவகை உற்பத்தி 1997இல் வீழ்ச்சியடைந்தது.

வெளிநாடுகளிலிருந்து கடத்திவரப்படும் சிகரெட்டுக்களுடனான போட்டிக்கு மத்தியில் சிலோன் ருபாக்கோ கம்பனியின் புகையிலை உற்பத்தி 1997இல் 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அண்மையில் குறைந்த வருமானம்கொண்ட நுகர்வோர்களின் தேவைப்பாடுகளை திருப்திசெய்ய குறைந்த தரத்திலான புதியரக புகையிலை உற்பத்திப் பொருட்கள் சந்தைக்கு வந்துள்ளன. இவை முறைசார்ந்த புகையிலை தொடர்பான புள்ளிவிபரங்களில் உள்ளடக்கப்படவில்லை. ஆதலினால் நாட்டின் புகையிலை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது மிகை மதிப்பிடப்பட்டிருக்கலாம். மேலும் புகைத்தலுக்கெதிராக நாட்டில் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்ட விழிப்புணர்வு இயக்கமும் சிகரட் விற்பனையின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

1996இலும் 1997 இலும் கோதுமை மா உதவிக் கொடுப்பனவு குறைக்கப்பட்டதனைத் தொடர்ந்து கோதுமை மாவின் விலைகள் உயர்வடைந்தமையினால் கோதுமை மாவிற்கான கேள்வி குறைவடைந்தது. இது கோதுமை மா பதனிடல் கைத்தொழில் துறையை பாதித்தது.

## இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள்

1997இல் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் கைத்தொழிலின் வெளியீடு 1996இன் வளர்ச்சியினை ஒத்ததாக 14.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. செயற்படு காரீயம், இறப்பர் டயர்களும் ரியூப்புக்களும், கைத்தொழில் மற்றும் சத்திரசிகிச்சைக்கான கையுறைகள், சிந்தடிக் உறைகள், பிளாத்திக்கு உற்பத்திகள் என்பனவற்றின் தயாரிப்பானது அதிகரித்த ஏற்றுமதிக் கேள்வியினைப் பிரதிபலித்து குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைக் காட்டியது. இவ்வகையினுள் உள்நாட்டு சந்தைக்கு வழங்கல் செய்யும் கைத்தொழில்களான தீந்தைகள், மெருகுப் பூச்சு வகைகள், விவசாய இரசாயனங்கள், சவர்க்காரம், குளியலறைப் பொருட்களும் ஏனைய தூய்மையாக்கிகளும், உந்து ஊர்தி ரயரும் ரியூப்பும், புத்தாக்கம் செய்யப்பட்ட ரயர்கள் பொலித்தீன் மற்றும் பீவீசி பொருட்கள் போன்றனவும் 1997இல் குறிப்பிடத்தக்க செயலாற்றத்தினை குறித்துக்காட்டின. ஏற்றுமதிசார் இறப்பர் தயாரிப்புத் துறையினைப் பொறுத்தமட்டில் 1997இல் இறப்பர் கையுறை தயாரிப்புக் கைத்தொழிலில் புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டதனைத் தொடர்ந்து கூட்டிய பெறுமதி குறைவான விடயங்களிலிருந்து கூட்டிய பெறுமதி உயர்வான விடயங்களுக்கு நகர்வொன்று காணப்பட்டது. அதிகரித்த பன்னாட்டு போட்டித் தன்மையின் காரணமாக இறப்பரை அடிப்படையாகக்கொண்ட ஏற்றுமதிசார் கைத்தொழில்கள் கழிவுகளை வழங்க வேண்டியிருந்தது. நாட்டின் கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கமானது தீந்தைகள், மெருகூட்டிகள் பீவீசீ பொருட்கள் போன்றவற்றிற்கான கேள்வியினைத் தூண்டியது. செயற்றிறன்வாய்ந்த விளம்பர பிரசாரங்கள், தரமேம்பாடு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுடன் ஒப்பிடுகையில் சார்பளவில் கவர்ச்சிகரமான விலைகள் என்பன உள்நாட்டுச் சவர்க்காரம், குளியலறைப் பொருட்கள் மற்றும் ஏனைய தூய்மை யாக்கிப் பொருட்கள் போன்றவற்றிற்கான கேள்வியைத் தூண்டின. வளமாக்கியின் தயாரிப்பும் கலப்பும் 1997இல் மிதமான வளர்ச்சியைக் காட்டின.

குறிப்பாக உணவு பதனிடல் மற்றும் ஆடைக் கைத்தொழில் போன்ற பலதரப்பட்ட முடிவுப் பொருட்களிலிருந்தான அதிகரித்த கேள்வியானது பிளாத்திக்கு மற்றும் பொலித்தீன் உற்பத்தித் துறையின் விரைந்த வளர்ச்சிக்கு உதவியது. செயற்படு காரீயம், அச்சிடுவதற்கான இரசாயனங்கள், ஒட்சிசன் போன்ற இரசாயன உற்பத்திப் பொருட்களின் வளர்ச்சியானது மென்பொறியியல் கைத்தொழிலின் விரிவாக்கத்தினைப் பிரதிபலித்தது.

## ஏனைய கைத்தொழில் உற்பத்திகள்


உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் வகை 18.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 1997இல் கைத்தொழில் வெளியீட்டு வளர்ச்சியில் 7.5 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தது. முக்கியமாக உள்நாட்டுச் சந்தைக்கு வழங்கல் செய்யும் ஏனைய கைத்தொழில்களுக்கான வேளாண்மை மற்றும் மின்பொறி இயந்திரங்கள், உலோக உற்பத்திப் பொருட்களான படகுகள், அலுவலக அலுமாரிகள், கோவைகளுக்கான பெட்டகங்கள், மேசைகளும் கதிரைகளும், ஆடைகளுக்கான அலுமாரிகள், திரவக் குவளைகள், அச்சிடப்பட்ட தகடுகள், அலுமினியக் கதவு, யன்னல் அடிச்சட்டங்கள், அன்டெனாக்கள் போன்றவற்றின் உற்பத்தி 1997இல் விரிவடைந்தது. முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் எந்திரவியல் மின்னியல் உபகரணங்களின் உற்பத்தியும் 1997இல் மேம்பாடடைந்தது. அதிகரித்த மட்டத்திலான அரசாங்க கொள்வனவுக் கட்டளைகளை பிரதிபலிக்கும்வகையில் படகுகளின் தயாரிப்பும், படகு பழுதுபார்க்கும் நடவடிக்கைகளும் 1997இல் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைக் காட்டின. வழங்கல் பற்றாக்குறை மற்றும் பலகைக்கான மிகைவிலை என்பன அலுவலக மற்றும் வீட்டுப் பாவனைக்கான உருக்குத் தளபாடங்கள் அலுமினிய கதவு மற்றும் யன்னல் அடிச் சட்டங்கள் ஆகியனவற்றுக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்தன. மின்னியல் எந்திரவியல் இயந்திரங்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் மேற்கத்தைய நாடுகளிலிருந்தான அதிகரித்த கொள்வனவுக் கட்டளைகளின் உதவியுடன் 1997இல் வளர்ச்சியுற்றன. மோட்டார் சொகுசு வாகனங்கள் மற்றும் லொறிகளை வடிவமைத்தல், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் மின்குமிழ்களின் தயாரிப்பு என்பன இறக்குமதிகளின் போட்டி மற்றும் அரசாங்க கொள்வனவுக் கட்டளைகள் குறைவடைந்தமை என்பனவற்றின் காரணமாக தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் வீழ்ச்சியை எடுத்துக்காட்டின.

வெண்களிமண் உருவங்கள், பதனிடப்பட்ட சிலிக்கா படிகக்கல், பளிங்குக்கல் மற்றும் மட்பாண்டப் பொருட்கள் என்பனவற்றின் தயாரிப்பிலான முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளின் மேம்பாடடைந்த செயலாற்றமானது உலோகமல்லா உற்பத்திகளின் 4.4 சதவீத வளர்ச்சிக்கு வழிவகுத்தது. வைரக்கல் பதனிடல் கைத்தொழில் மெதுவடைந்தமையின் காரணமாக இவ்வகையிலுள்ள முதலீட்டுச் சபை சாராத கைத்தொழில்கள் மிதமான வளர்ச்சியை மட்டுமே காட்டின. இவ்வகையிலுள்ள ஏனைய கைத்தொழில்களான சீமெந்து, தரை ஓடுகள், மட்பாண்ட உற்பத்திகள் மற்றும் காரீயம் என்பன இவ்வாண்டில் நேர்க்கணிய வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன. பயிற்றப்பட்ட ஆளணியினருக்கான தட்டுப்பாடு, தொழிலாளர்களை பயிற்றுவிப்பதற்கான உயர் செலவு, கிழக்காசிய நிதி நெருக்கடியின் விளைவாக பன்னாட்டு கேள்வி குறைவடைந்தமை ஆகிய முக்கிய காரணங்களினால் வைரம்வெட்டுதல் மற்றும் பட்டை தீட்டல் கைத்தொழில் இடர்பாடுகளை எதிர்கொண்டது. உயர்வடைந்த கட்டடவாக்க நடவடிக்கைகளினால் தூண்டப்பட்டு உள்நாட்டு கேள்வி அதிகரித்ததன் காரணமாக சீமெந்து மற்றும் தரைஓடுகள் கைத்தொழில் 1997இல் வளர்ச்சியுற்றது. வெண்களிமண்ணிலான மேசைப் பொருட்கள் மற்றும் ஏனைய வெண்களிமண் உற்பத்திகள் என்பனவற்றிற்கான அதிகரித்த வெளிநாட்டுக் கேள்வியினை பிரதிபலித்து அவற்றின் வெளியீடு விரிவடைந்தது.

மடித்து நெளிவாக்கப்பட்ட அட்டைப் பெட்டிகள் அச்சிடப்பட்ட பொருட்கள் போன்ற ஏற்றுமதி சார்ந்த தாள் உற்பத்திகளின் விரிவாக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டவாறு தாள் மற்றும் தாள் உற்பத்தி மிதமான வளர்ச்சியினைக் காட்டியது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தாள் உற்பத்திப் பொருட்களான அப்பியாசக் கொப்பிகள், சுட்டுத் துண்டுகள், கணனித் தாள்கள் போன்றன குறைந்த விலைகளில் சந்தையில் காணப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுடன் கடும் போட்டியை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. விலைகள் உயர்வடைந்தமையின் காரணமாக புதினப் பத்திரிகைகளின் விற்பனை வீழ்ச்சியடைந்தது. மரங்கள் மீதான இறக்குமதித் தீர்வையை முற்றாக நீக்குதலையும் உள்ளடக்கி 1996 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளினூடாக வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்களுக்கு மத்தியிலும் மூலப்பொருட்களின் பற்றாக்குறை வழங்கல், தேர்ச்சி பெற்ற ஊழியர்களின் தட்டுப்பாடு, உள்நாட்டு கேள்வி வீழ்ச்சியடைந்தமை என்பன காரணமாக உள்நாட்டுச் சந்தை சார்ந்த மரம் மற்றும் மர

உற்பத்திக் கைத்தொழில் 1997இலும் தொடர்ந்து இடர்பாடுகளை எதிர்கொண்டது. ஏற்றுமதி சார்ந்த மரத்தினாலான விளையாட்டுப் பொம்மைகள் மற்றும் தளபாடங்கள் என்பனவற்றின் வெளியீடு 1997இல் அதிகரித்தது.

வரைபடம் 4.3
கைத் தொழில் உற்பத்தியில் அரச, தனியார் துறையின் பங்கு




## அரசதுறைக் கைத்தொழில்கள்

பெற்றோலியப் பொருட்களின் பதனிடல் 1997 இல் அரச துறைக் கைத்தொழில் வெளியீட்டின் 91 சதவீதத்திற்கு வகைகூறியது. 1997இன் முற்பகுதியில் வழமையான பேணல் நடவடிக்கைகளுக்காக சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதனால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது அரச துறைக் கைத்தொழிலின் பொதுவான வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றது. மேலும் இலங்கை உருக்குக் கம்பனி 1996இல் தனியார்மயப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து அதன் வெளியீடு தனியார்துறையின்கீழ் கணக்கிடப்படுகின்றது.

1997இல் வெளியீட்டில் அதிகரிப்புக்களை பதிவு செய்த அரசதுறை முயற்சிகளாக வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் (21 சதவீதம்) அரச மரக் கூட்டுத்தாபனம் (7 சதவீதம்) என்பன விளங்குகின்றன. வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உற்பத்தி இயலளவின் விரிவாக்கமும் மூலப் பொருட்களின் அதிகரித்த கிடைப்பனவும் கணிசமான பங்களிப்பினைச் செய்தன.

இவ்வாண்டில் வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளாக வரையறுக்கப்பட்ட இலங்கை கனிப்பொருள் மணல் (62 சதவீதம்) வரையறுக்கப்பட்ட லங்கா பொசுபேற்று (13 சதவீதம்), வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கம்பனி (10 சதவீதம்) மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா சோல்ட் (4 சதவீதம்) என்பன காணப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனத்தின் வெளியீட்டில் ஏற்பட்ட குறைப்பிற்கு பங்களிப்புச் செய்த முக்கிய காரணியாக கிழக்கின் பாதுகாப்பு நிலவரங்களின் காரணமாக ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் இல்மனைட் ஏற்றுமதி குறைவடைந்தமை அமைகின்றது. வரையறுக்கப்பட்ட பொசுபேற்று நிறுவனத்தின் வெளியீட்டு வீழ்ச்சிக்கு முதல் அரையாண்டுப் பகுதியில் வளமாக்கிப் பிரயோகத்தில் ஏற்பட்ட குறைப்பானது பொறுப்பாயமைந்தது. இறக்குமதி மீதான தீர்வை

**அட்டவணை 4.4**

அரச துறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண்

1977 = 100

| வகை | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 8.1 | 9.3 | 10.2 | 9.2 | 9.4 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 10.3 | - | - | - | - |
| 3. மர, மர உற்பத்திகள் | 25.4 | 22.0 | 26.3 | 31.7 | 34.0 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 174.1 | 187.8 | 173.2 | 152.2 | 136.2 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 121.8 | 126.3 | 118.0 | 132.0 | 116.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 129.4 | 134.2 | 124.2 | 138.9 | 122.8 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 120.0 | 5.5 | 5.9 | 6.8 | 4.7 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 92.4 | 130.8 | 95.0 | 116.5 | - |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | - | - | - | - | - |
| எல்லா வகைகளும் | 87.9 | 83.8 | 78.0 | 86.2 | 72.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்தவை | 41.7 | 27.7 | 24.5 | 25.1 | 13.5 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

குறைக்கப்பட்டதனைத் தொடர்ந்து அதிகரித்த இறக்குமதிப் போட்டியின் காரணமாக உள்நாட்டு தாள் உற்பத்திகளின் விற்பனை வீழ்ச்சியடைந்தமையும் இயந்திரங்கள் அடிக்கடி செயலற்றுப் போனமையும் வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கம்பனியின் வெளியீட்டில் வீழ்ச்சியினை விளைவித்தன.

## 4.3 கூட்டிய பெறுமதியும் இயலளவுப் பயன்பாடும்

பெயரளவு நியதிகளில் கைத்தொழில் துறையின் கூட்டிய பெறுமதி 1997இல் 17.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இத்துறையின் இயக்க விசையினைக் குறித்துக்காட்டி உண்மை நியதிகளிலான கூட்டிய பெறுமதி 10.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

**அட்டவணை 4.5**

கைத்தொழில்களின் கூட்டிய பெறுமதி
(நடைமுறை விலைகளில்)

| வகை | ரூ. மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 (அ) | 1996 | 1997 (அ) |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 21,704 | 24,373 | 29,507 | 32,891 | 35,585 | 11.5 | 8.2 |
| 2 புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 18,994 | 20,660 | 24,859 | 31,184 | 40,714 | 25.4 | 30.6 |
| 3 மர, மர உற்பத்திகள் | 831 | 1,081 | 1,177 | 1,250 | 1,257 | 6.2 | 0.6 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 1,912 | 2,301 | 2,458 | 2,580 | 2,633 | 5.0 | 2.1 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 4,723 | 5,758 | 6,898 | 8,957 | 10,745 | 29.8 | 20.0 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 7,163 | 9,272 | 9,726 | 10,537 | 11,600 | 8.3 | 10.1 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 279 | 356 | 347 | 450 | 598 | 29.7 | 32.9 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 3,608 | 4,344 | 4,547 | 4,809 | 5,924 | 5.8 | 23.2 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 1,532 | 1,838 | 2,319 | 2,763 | 3,157 | 19.1 | 14.3 |
| மொத்தம் | 60,746 | 69,983 | 81,838 | 95,421 | 112,213 | 16.6 | 17.6 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1997இல் உள்நாட்டில் கூட்டிய பெறுமதி, உற்பத்திப் பெறுமானத்தில் 37 சதவீதத்திற்குச் சிறிதளவால் அதிகரித்தது. இக் கூட்டிய பெறுமதி விகிதமானது உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், இயந்திரங்களும் போக்குவரத்துக் கருவிகளும், மரம் மற்றும் மர உற்பத்திகள் ஆகிய கைத்தொழில் வகைகளுக்கு 50 சதவீதத்திற்கும் மேலானதாக அமைந்து காணப்பட்டது. தாள் மற்றும் தாள் உற்பத்திகள் வகை 48 சதவீத கூட்டிய பெறுமதி விகிதத்தைக் கொண்டிருந்தது. புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள்வகை 33 சதவீத கூட்டிய பெறுமதி விகிதத்தைக் கொண்டிருந்தது. ஏனைய துணைத் துறைகள் 25 சதவீதத்திற்கும் கீழான கூட்டிய பெறுமதி விகிதத்தைக் கொண்டிருந்தன.

முதலீட்டுச்சபைசாராத கைத்தொழில் துறையின் நிறுவப்பட்ட இயலளவு 1997இல் 5.0 சதவீதத்தினால் விரிவடைந்தது. புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகை 9.1 சதவீத அதிகூடிய இயலளவு விரிவாக்கத்தினைக் கொண்டிருந்தது. சார்புரீதியில் மிகவும் சாதகமான முதலீட்டுச் சூழ்நிலையின் உதவியுடன் 1997இல் தனியார் முதலீட்டில் ஏற்பட்ட வளர்ச்சியினைப் பிரதிபலித்து ஏனைய பல துறைகள் உற்பத்தி இயலளவுகளில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினைக் காட்டின. அவையாவன உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (6.0 சதவீதம்), இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் (4.1 சதவீதம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (4.5 சதவீதம்), தாள் மற்றும் தாள் உற்பத்திகள் (2.3 சதவீதம்) மற்றும் உணவு, குடிபானம், புகையிலை (2.2 சதவீதம்) என்பனவாகும். இதே வேளை அனைத்து வகைகளையும் உள்ளடக்கிய இயலளவுப் பயன்பாட்டு விகிதமும் 1996இன் 83 சதவீதத்திலிருந்து 1997இல் 84 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

## 4.4 உற்பத்திச் செலவு, இலாபத்தன்மை, தொழில்நிலை

மொத்த உற்பத்திச் செலவினை விஞ்சிய உற்பத்தியின் தொழிற்சாலைப் பெறுமானத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட முதலீட்டுச் சபை சாராத கைத்தொழில்துறையின் சராசரி தொழிற்சாலை இலாப விகிதம் 1996இன் 14.9 சதவீதத்

திலிருந்து 1997இல் 15.6 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. 1997இல் உற்பத்தியின் தொழிற்சாலைப் பெறுமானம் 12.7 சதவீதத்தினாலும், சராசரி உற்பத்திச் செலவு 11.7 சதவீதத்தினாலும் அதிகரித்தன. கூலிகள், வலு, எரிபொருள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் என்பனவற்றிற்கான செலவுகள் அதிகரித்த வேளையில் வட்டி மற்றும் உள்நாட்டு மூலப்பொருட்கள் என்பனவற்றிற்கான செலவுகள் வீழ்ச்சியைக் குறித்துக் காட்டின. முன்னைய ஆண்டினைப் போன்றே புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் 23.1 சதவீத அதியுயர் இலாப விகிதத்தைக் காட்டி 1996இனைப் பார்க்கிலும் சிறிதளவு மேம்பாட்டினைக் குறித்துக் காட்டின. உணவு, குடிபானம், புகையிலை, உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், இரசாயனம் பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்தி வகைகள் என்பன இலாபத்தன்மையில் மேம்பாடொன்றினைக் காட்டிய வேளையில் ஏனைய வகைககள் சிறியளவிலான வீழ்ச்சிகளை எதிர் நோக்கின.

முதலீட்டுச் சபை சாராத தனியார் துறையின் மொத்த கூலிச் செலவு பெயரளவு நியதிகளில் 21.7 சதவீதத்தினால் அதிகரித்து மொத்த தொழிற்படையினதும் குறிப்பாக புடவைகள் அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் துணைத் துறையின் மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவுகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. ஊழியரொருவருக்கான வெளியீட்டுப் பெறுமானம் ஊழியரொருவருக்கான உற்பத்திச் செலவிற்கும் மேலாக உயர்வடைந்து தொழிலாளர் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட மேம்பாடொன்றினைக் குறித்துக்காட்டியது. தொழில்நிலை மட்டத்தின் 3.7 சதவீத அதிகரிப்பினையும் உற்பத்தித் திறனின் 2.9 சதவீத வளர்ச்சியினையும் கருத்திற்கெடுக்கும் பொழுது ஏனைய காரணங்களின் விளைவாக கூலிப் பட்டியலில் 13.7 சதவீத அதிகரிப்பொன்று காணப்பட்டது. 1997இன் பணவீக்க வீதத்துடன் ஒப்பிடுகையில் இது உயர்வானதாகத் தோன்றுகின்றது. இத்தகைய கூலி அதிகரிப்புக்கள் பொருளாதாரத்தில் உள்ளமைந்த பணவீக்கச் சார்பு ஒன்றினை உருவாக்கும். இது விரும்பத் தக்கதல்ல. மொத்த உற்பத்திச் செலவின் விகிதாசாரமாக கூலிப் பட்டியலானது பெரும்பாலும் அனைத்து துணை வகைகளிலும் அதிகரித்தது. மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்கள் வகையின் மொத்த உற்பத்திச் செலவில் கூலிச்செலவின் பங்கு 19.4 சதவீதமாக மதிப்பிடப் பட்டது. உணவு, குடிபானம், புகையிலை, உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் மற்றும் அடிப்படை உலோக உற்பத்திகள் என்பனவற்றில் கூலிச் செலவின் பங்கு தாழ்வடைந்து காணப்பட்டது.

மொத்த உற்பத்திச் செலவின் விகிதாசாரமாக வலுவிற்கான செலவு 1996இன் 4.4 சதவீதத்திலிருந்து 1997இல் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள், உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்தி ஆகிய

**அட்டவணை 4.6**

முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாப விகிதங்கள் (அ)

| வகை | மொத்த உற்பத்தி செலவு (ரூ. மில்.) | | உற்பத்தியின் மொத்த பெறுமதி (ரூ. மில்.) | | தொழிற்சாலை இலாப விகிதம் (சதவீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 1996 | 1997 | 1996 | 1997 | 1996 | 1997 |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 47,887 | 51,897 | 54,791 | 59,996 | 12.6 | 13.5 |
| 2 புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 13,201 | 16,320 | 17,126 | 21,236 | 22.9 | 23.1 |
| 3 மர, மர உற்பத்திகள் | 954 | 956 | 1,085 | 1,063 | 12.1 | 10.1 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 3,098 | 3,326 | 3,516 | 3,716 | 11.9 | 10.5 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 10,515 | 11,412 | 11,828 | 12,881 | 11.1 | 11.4 |
| உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 9,232 | 10,320 | 11,540 | 12,694 | 20.0 | 18.7 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 816 | 904 | 958 | 1,052 | 14.8 | 14.1 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 6,305 | 7,597 | 7,340 | 9,322 | 14.1 | 18.5 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 2,761 | 3,145 | 3,120 | 3,526 | 11.5 | 10.8 |
| மொத்தம் | 94,769 | 105,877 | 111,304 | 125,486 | 14.9 | 15.6 |

(அ) 470 முதலீட்டுச் சபையல்லா தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4.7**

**முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ)**
**(மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)**

| வகை | உள்நாட்டுச் செலவு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வலுவும் எரி பொருளும் | | கூலி | | மூலப் பொருட்கள் | | வட்டிச் செலவு | |
| | 1996 | 1997 | 1996 | 1997 | 1996 | 1997 | 1996 | 1997 |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 2.4 | 2.5 | 8.2 | 9.0 | 40.5 | 39.2 | 1.7 | 1.5 |
| 2 புடவைகள், அணியும் தோல் உற்பத்திகள் | 4.3 | 5.2 | 15.4 | 16.4 | 15.2 | 16.7 | 3.8 | 3.2 |
| 3 மர, மர உற்பத்திகள் | 8.9 | 9.2 | 18.6 | 19.4 | 36.9 | 37.8 | 5.5 | 4.1 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 2.1 | 2.2 | 10.0 | 12.3 | 13.9 | 15.6 | 5.2 | 5.0 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் | 4.7 | 5.0 | 11.7 | 12.2 | 38.1 | 33.0 | 2.3 | 2.1 |
| 6 உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் | 15.4 | 16.6 | 16.1 | 16.9 | 13.2 | 15.6 | 4.9 | 4.5 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 8.2 | 9.5 | 9.5 | 11.2 | 40.2 | 37.5 | 4.2 | 4.0 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 2.9 | 3.2 | 10.5 | 11.0 | 18.5 | 22.6 | 3.9 | 3.1 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 5.3 | 4.8 | 13.4 | 14.1 | 36.2 | 39.4 | 3.1 | 2.1 |
| மொத்தம் | 4.4 | 4.8 | 10.8 | 11.8 | 31.6 | 30.4 | 2.7 | 2.5 |

(அ) 470 முதலீட்டுச் சபையல்லா தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வகைகளின் அதிகரித்த மட்டத்திலான வலுப் பயன்பாட்டினைப் பிரதிபலித்து வலு மற்றும் எரிபொருள் செலவு பெயரளவு நியதிகளில் 22.5 சதவீதத்தினால் அதிகரித்தது. சுய மின்வலு உருவாக்கத்திற்காக இலங்கை மின் சபையினால் வழங்கப்பட்ட ஊக்குவிப்புத் திட்டம் 1997இல் நீக்கப்பட்டமையும் அதிகரித்த வலுச் செலவுப் பட்டியலுக்கான காரணமொன்றாகும். உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள், மரம் மற்றும் மர உற்பத்திகள் என்பனவற்றின் உற்பத்திச் செலவில் கணிசமான பாகமொன்றினை வலுச் செலவு பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. 1997இல் தாள் மற்றும் தாள் உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், உணவு, குடிபானம், புகையிலை உற்பத்தி ஆகிய வகைககள் மொத்த உற்பத்திச் செலவில் அதிகுறைந்த வலுச் செலவுப் பங்கினைக் கொண்டிருந்தன.

மொத்த உற்பத்திச் செலவில் வட்டிச் செலவின் பங்கு 1996இன் 2.7 சதவீதத்திலிருந்து 1997இல் 2.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து 1997இல் வட்டி வீதங்களின் குறைப்பினைப் பிரதிபலித்தது. 1997இல் மொத்த வட்டிச் செலவு அதிகரிப்பு 3.9 சதவீதமாக மட்டுமே அமைந்து அனைத்துச் செலவு விடயங்களிலும் மிகக் குறைந்த அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. 1996 உடன் ஒப்பிடுகையில் புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் மற்றும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் என்பன இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் சார்புரீதியில் உயர்வான பங்கினைப் பயன்படுத்தின.

## கைத்தொழிலில் தொழிலாளர் உற்பத்தித்திறன்

தொழிலாளர் உற்பத்தித் திறனில் மேம்பாடொன்றினைக் குறித்துக்காட்டும் வகையில் 470 முதலீட்டுச் சபையல்லா நிறுவனங்களின் மாதிரிகளின் உண்மைக் கூட்டிய பெறுமதியின் அதிகரிப்பு கைத்தொழில்களின் மொத்தத் தொழில் நிலையின் அதிகரிப்பினைவிட உயர்வானதாகக் காணப்பட்டது. இவ்வாண்டில் முதலீட்டுச் சபையல்லாத் துறையின் தொழிலாளர் உற்பத்தித் திறன் 2.9 சதவீதத்தினால் அதிகரித்தது. பெரும்பாலான கைத்தொழில் வகைகளில் உண்மைக் கூட்டிய பெறுமதி அதிகரிப்புக்கும் தொழிலாளர் உற்பத்தித் திறனுக்கும் இடையில் நேர்க்கணிய உறவுமுறையொன்று காணப்பட்டது. உணவு குடிபானம் புகையிலை வகைகளில் 2.4 சதவீத தொழிற்படைக் குறைப்புடன் கூட்டிய பெறுமதியில் மிதமான அதிகரிப்பொன்று காணப்பட்டது. இதேபோன்று, குறிப்பாக உணவு குடிபானம் புகையிலை, புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் கைத்தொழில் வகைகளில் இலாபத்தன்மை அதிகரிப்புக்கும் தொழிலாளர் உற்பத்தித் திறனின் மேம்பாட்டுக்கும் இடையில் நேரடியான பரஸ்பர உறவுமுறையொன்று காணப்பட்டது. உணவு குடிபானம் புகையிலை உற்பத்திப் பொருட்கள் (4.0 சதவீதம்), புடவை அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் (5.2 சதவீதம்), உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் (9.0 சதவீதம்), இரசாயனம் இறப்பர்

பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் (1.8 சதவீதம்) என்பனவற்றில் தொழிலாளர் உற்பத்தித் திறன் அதிகரித்தது. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள், மர மற்றும் மர உற்பத்திப் பொருட்கள் தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் என்பன வற்றில் தொழிலாளர் உற்பத்தித்திறன் வீழ்ச்சியடைந்தது.

## கைத்தொழிலில் தொழில்நிலை


1997இல் 470 முதலீட்டுச் சபையல்லாக் கைத்தொழில் முயற்சிகளின் தொழில் நிலையில் 3.7 சதவீத அதிகரிப்பினை கைத்தொழில் உற்பத்தி அளவீடு வெளிப்படுத்தியது. தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள் தவிர்ந்த அனைத்து முக்கிய கைத்தொழில் துணைத் துறைகளிலும் 1997இல் தொழில் நிலை அதிகரித்தது. புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் வகையில் 8.1 சதவீதத்தினாலும் இரசாயனம் பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் வகையில் 3.0 சதவீதத்தினாலும் உருவமைக்கப்பட்ட உலோகமல்லாக் கனிப்பொருள் உலோக உற்பத்திகள் 4.6 சதவீதத்தாலும் உற்பத்திகள் 6.5 சதவீதத்தினாலும் தொழில் நிலை அதிகரித்தது. உணவு, குடிபானம், புகையிலை உற்பத்தி வகையில் தொழில் நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சி மிகையான தொழிலாளர்கள் ஓய்வுபெறச் செய்யப்பட்டமையினால் ஏற்பட்டதாகும்.

## 4.5 முதலீடு

## வெளிநாட்டு முதலீடு

**வரைபடம் 4.4**

**கைத்தொழில் தொழிலாளர் உற்பத்தித் திறன் (1995 = 100)**




வெளிநாட்டு மூலதனமானது நிதியியல், தொழில்நுட்ப மற்றும் தொழில் முயற்சிகளுக்கு மூலவளங்களை வழங்குவதிலும் அதே வேளை புதிய சந்தைகளை சென்றடைவதற்கு உதவுவதிலும் முக்கிய பங்கினை கொண்டிருக்கின்றது. அரசாங்கத்தின் முகவர் என்ற வகையில் இலங்கையின் முதலீட்டுச் சபை வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களைத் திரட்டுவதில் பொறுப்பாகவிருந்ததோடு ஆண்டுக் காலப்பகுதியில் ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் போட்டியின் மத்தியிலும் மலேசியா, கொங்கொங், சிங்கப்பூர், தென்கொரியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, பாக்கித்தான், சேர்மனி மற்றும் சீனா போன்ற நாடுகளில் இருந்து கணிசமான அளவு வெளிநாட்டு மூலதனங்களைக் கவருவதில் வெற்றி கண்டுள்ளது. முதலீட்டுச்சபையின் கைத்தொழில்களினால் பெறப்பட்ட முதலீடுகள் முன்னைய ஆண்டின் 56 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 1997இல் 41.2

**அட்டவணை 4.8**

முதலீட்டுச் சபை அல்லா தனியார் துறையில் தொழிலாளர் உற்பத்தித் திறன் குறிகாட்டி (அ)

1995=100

| | வகை | 1996 | 1997 | % மாற்றம் |
|---|---|---|---|---|
| 1 | உணவு, குடிபானங்கள், புகையிலை | 104.0 | 108.2 | 4.0 |
| 2 | புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்தி | 98.9 | 104.0 | 5.2 |
| 3 | மர மர உற்பத்திகள் | 103.7 | 101.0 | -2.6 |
| 4 | தாளும் தாள் உற்பத்திகளும் | 98.7 | 96.0 | -2.7 |
| 5 | இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 105.2 | 107.1 | 1.8 |
| 6 | உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 104.4 | 97.7 | -6.4 |
| 7 | அடிப்படை உலோக உற்பத்திகள் | 104.3 | 100.4 | -3.7 |
| 8 | உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 97.0 | 105.7 | 9.0 |
| 9 | வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை | 104.2 | 106.4 | 2.1 |
| | மொத்தம் | 98.9 | 101.8 | 2.9 |

(அ) 470 முதலீட்டுச்சபை அல்லா தனியார் துறை நிறுவனங்களின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

சதவீதத்தினால் அதிகரித்துள்ளன. இவ்வாண்டுக் காலத்தில் இலங்கைக்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சலை வழங்குவதில் அதிஉயர் உள்ளார்ந்த வளம் காணப்படுகின்றதெனக் கருதப் படுகின்ற ஐக்கிய இராச்சியம், சேர்மனி, அவுஸ்திரேலியா, யப்பான், மலேசியா,நோர்வே மற்றும் சிங்கப்பூர் உட்பட பல நாடுகளுக்கு முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முதலீட்டுச்சபை தூதுக்குழுக்களை அனுப்பி வைத்தது. அதே வேளையில் பல்வேறு முதலீட்டு ஊக்குவிப்பு செயற்றிட்டங்களின் கீழ் இலண்டன் வணிகக் கழகம், யப்பான் வணிகக் கழகம் உட்பட ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, யப்பான், மலேசியா, இந்தியா, பாக்கித்தான் குவைட் மற்றும் ஈரான் போன்ற நாடுகளிலிருந்து வெளிநாட்டு தூதுக்குழுக்களும் இந்தியாவின் உருக்குக் கைத் தொழில் சம்மேளனத்திலிருந்தான தூதுக்குழுவொன்றும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளன.

1997இல் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக் காணப்பட்டது. முதலீட்டுச்சபை சட்டத்தின் பிரிவு 17இன் கீழ், 1996 இல் முதலீட்டுச்சபை ஒப்புதல் வழங்கிய 248 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் ரூபா 73,159 மில்லியன் முதலீட்டுக் கடப்பாடுகளைக் கொண்ட 330 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தமையின் மூலம் 1997ஆம் ஆண்டு இறுதிவரை ஒப்புதலளிக்கப் பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 2,283 ஆகியது. 1997 இல் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகளின் வெளிநாட்டுக் கூறு ரூபா 47,028 மில்லியன் அல்லது 1997 இல் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த முதலீட்டில் 64 சதவீதமாக இருந்தது. 1997 இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் 85 வெளி நாட்டுக்கு சொந்தமானதாகவும், 96 கூட்டு முயற்சிகளாகவும் மற்றும் 149 முழுமையாக உள்நாட்டினருக்கு சொந்தமான தொழில் முயற்சிகளாகவும் இருந்தன. இவற்றில் தொழில் வாய்ப்புக்கான உள்ளார்ந்த வளம், 68,003 ஆட்களாகக் காணப்பட்டது. 1997 இல் ஒப்புதலளிக்கப் பட்ட செயற்றிட்டங்களில் 31 செயற்றிட்டங்கள் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை வகைக்கும், 67 செயற்றிட்டங்கள் புடவை, அணியும் ஆடைகள்,மற்றும் தோல் உற்பத்தி வகைக்கும் மற்றும் 141 செயற்றிட்டங்கள் பணிகள் துறைக்குமாகக் காணப்பட்டன.

1996இல் கைச்சாத்திடப்பட்ட ரூபா 37,796 மில்லியன் முதலீட்டுக் கடப்பாடுகளைக் கொண்ட 135 செயற்றிடங்களுடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய ஆண்டில் முதலீட்டுச்சபை ரூபா 139,744 மில்லியன் முதலீட்டுக் கடப்பாடுகளைக் கொண்ட 187 செயற்றிட்டங்களுக்கு கைச்சாத்திட்டதன் மூலம் 1997ஆம் ஆண்டு இறுதிவரை கைச்சாத்திடப்பட்ட மொத்த உடன்படிக்கைகளின் எண்ணிக்கை 1,464 ஆகியது. 1997இல் கைச்சாத்திடப்பட்ட முதலீடுகளின் அதி உயர் பெறுமதிக்கு முக்கிய காரணம் அம்பாந் தோட்டையில் ரூ.100,000மில்லியன் பெறுமதியான பாரிய எண்ணெய் சுத்திகரிப்பு செயற்றிட்டத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாகும். ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டின்வெளிநாட்டுக் கூறு, ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த முதலீட்டின் ரூபா 127,786 மில்லியனாக அல்லது 91 சதவீதமாக இருந்தது. இந்த முதலீடு

**அட்டவணை 4.9**

**தனியார் துறைக் கைத்தொழில்களில் தொழில் வாய்ப்பு (அ)**

எண்ணிக்கை

| | வகை | 1996 | 1997 | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| 1 | உணவு, குடிபானங்கள், புகையிலை | 22,143 | 21,615 | -2.4 |
| 2 | புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 34,196 | 36,980 | 8.1 |
| 3 | மர மர உற்பத்திகள் | 2,410 | 2,298 | -4.6 |
| 4 | தாளும் தாள் உற்பத்திகளும் | 6,803 | 6,848 | 0.7 |
| 5 | இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் | 15,342 | 15,795 | 3.0 |
| 6 | உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 8,712 | 9,275 | 6.5 |
| 7 | அடிப்படை உலோக உற்பத்திகள் | 596 | 640 | 7.4 |
| 8 | உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 8,573 | 8,971 | 4.6 |
| 9 | வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 6,213 | 6,418 | 3.3 |
| | மொத்தம் 104,988 | 108,840 | 3.7 | |

(அ) 470 முதலீட்டுச் சபையல்லா தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 4.10

### முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் பெறப்பட்ட முதலீடுகள் (அ)

| வகை | தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை | | வெளிநாட்டு முதலீடுகள் (ரூ.மில்.) | | மொத்த முதலீடு (ஆ) (ரூ.மில்.) | |
|---|---|---|---|---|---|---|
| | 1996(இ) | 1997 (ஈ) | 1996(இ) | 1997 (ஈ) | 1996(இ) | 1997 (ஈ) |
| 1 உணவு, குடிபானங்கள், தேயிலை | 77 | 92 | 2,274 | 4,253 | 4,437 | 7,923 |
| 2 புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 268 | 287 | 12,312 | 15,456 | 14,997 | 21,843 |
| 3 மர மர உற்பத்திகள் | 19 | 21 | 474 | 514 | 564 | 689 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 12 | 14 | 326 | 438 | 550 | 688 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 66 | 76 | 5,799 | 5,920 | 6,902 | 7,173 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 42 | 48 | 972 | 1,035 | 2,783 | 1,984 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 20 | 25 | 605 | 1,185 | 1,180 | 1,817 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 100 | 122 | 3,496 | 4,207 | 4,646 | 6,179 |
| 9 பணிகள் | 259 | 300 | 34,699 | 45,679 | 55,528 | 70,699 |
| மொத்தம் | 863 | 985 | 60,957 | 78,687 | 91,587 | 118,994 |

(அ) ஆண்டு இறுதியில் திரண்ட மொத்தம்
(ஆ) முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்
(இ) திருத்தப்பட்டவை.
(ஈ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை

களை ஈர்த்துக் கொள்ளக் கூடியதாகவிருந்த பாரிய கைத்தொழில் துறைகளாக உணவு, குடிபானம், மற்றும் புகையிலை புடவைகள் அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள், பணிகள்துறை என்பன காணப்பட்டன. 1997 இறுதிவரை ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களில் ரூபா 80,485 மில்லியன் முதலீட்டுக் கடப்பாடுகளைக் கொண்ட 723 தொழில் முயற்சிகள் 1997 இன் இறுதியில் வர்த்தகத் தொழிற்பாட்டில் ஈடுபட்டிருந்தன. இச் செயற்றிட்டங்களின் மொத்த முதலீட்டின் ரூபா 49,781 மில்லியன் அல்லது 62 சதவீதம் வெளிநாட்டு மூலங்களிலிருந்தாகும். 1997ஆம் ஆண்டின் இறுதியில் கட்டுநாயக்கா ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் 93 தொழில் முயற்சிகளும் பியகம ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தில் 54 தொழில் முயற்சிகளும் கொக்கல ஏற்றுமதிப்பதனிடல் வலயத்தில் 10 தொழில் முயற்சிகளும் ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களுக்கு வெளியே 562 தொழில் முயற்சிகளும் காணப்பட்டன.

முதலீட்டுச் சபையின் சட்டத்தின் (சாதாரண சட்டம்) 16ம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட 85 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடும்போது 1997 இல் முதலீட்டுச்சபை 99 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இந்தச் செயற்றிட்டங்களின் மொத்த முதலீட்டுக்கடப்பாடு ரூபா 2,456 மில்லியனாகக் காணப்பட்டதோடு இதன் வெளிநாட்டுக் கூறு ரூபா 1,822 மில்லியனாக அல்லது மொத்த முதலீட்டில் 74 சதவீதமாக இருந்தது. இவைகளில் 53 தொழில் முயற்சிகள் வெளிநாட்டுக்குச் சொந்தமாகவும் மற்றும் 46 தொழில் முயற்சிகள் கூட்டுத் தொழில் முயற்சிகளாகவும் அமைந்திருந்தது. இச் செயற்றிட்டங்களில் 3,976 பேருக்கான உள்ளார்ந்த தொழில் வாய்ப்பு வளம் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1997 ஆம் ஆண்டின் இறுதியில் இச்சட்டத்தின் கீழ் வர்த்தகக் தொழிற்பாட்டில் ஈடுபட்டிருந்த தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை 379 ஆக இருந்தது. இச் செயற்றிட்டங்களின் மொத்த மதிப்பிடப்பட்ட முதலீடு ரூபா 18,700 மில்லியனாக இருந்ததோடு அதில் ரூபா 10,694 மில்லியன் அல்லது 57 சதவீதம் வெளிநாட்டு மூலங்களில் இருந்து பெறப்பட்டதாகும். இந்த முதலீடுகளை ஈர்த்துக் கொண்ட பாரிய கைத்தொழில் வகைகளாக உருவமைக்கப்பட்ட உலோகம், இயந்திரத் தொகுதி மற்றும் போக்குவரத்துக் கருவிகள், உணவு, குடிபானம், புகையிலை மற்றும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் என்பனவற்றைக் கூறலாம்.

### உள்நாட்டு முதலீடுகள்

முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் பெரும்பகுதி உள்நாட்டு முதலீடு

**அட்டவணை 4.11**

**முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் தொழில் நிலை**

| | வகை | தொழில் நிலை (திசெ. முடிவில்) 1996 | 1997 (அ) |
|---|---|---|---|
| 1 | உணவு, குடிபானங்கள், புகையிலை | 6,931 | 8,625 |
| 2 | புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 155,794 | 161,321 |
| 3 | மர மர உற்பத்திகள் | 2,449 | 3,147 |
| 4 | தாளும் தாள் உற்பத்திகளும் | 733 | 1,011 |
| 5 | இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 20,718 | 22,319 |
| 6 | உலோகமல்லாக் கனிப் பொருள் உற்பத்திகள் | 9,226 | 9,709 |
| 7 | அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,399 | 1,681 |
| 8 | உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 26,624 | 31,563 |
| 9 | பணிகள் (ஆ) | 18,093 | 18,809 |
| | மொத்தம் | 241,967 | 258,185 |


(அ) தற்காலிகமானவை.
(ஆ) வரையறுக்கப்பட்ட ஏயர்லங்கா நீங்கலாக.

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை

களாகும். 1997 ஆம் ஆண்டின் இறுதியில் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் செயற் படுத்தப்பட்ட 723 செயற்றிட்டங்களின் உள்நாட்டு முதலீட்டுப் பொறுப்பு மொத்த முதலீட்டில் ரூ.30,704 மில்லியன் அல்லது 38 சதவீதமாகும். மேலும் 1997 இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பி டப்பட்ட உள்நாட்டு முதலீடு மொத்தமுதலீட்டில் ரூ. 26,130 மில்லியனுக்கு அல்லது 36 சதவீதத்திற்கு கணக்கிடப்பட்டிருந்தது. அதே வேளையில் 1997 இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த முதலீடான ரூ.11,958 மில்லியன் அல்லது 9 சதவீதம் உள்ளூர் மூலங்களிலிருந்தாகும். 1997இல் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 16 இன்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட உள்நாட்டு முதலீட்டுக்கூறு ரூ.634 மில்லியனாக அல்லது மொத்த முதலீட்டின் 26 சதவீதமாகக் காணப்பட்டது.

1997 ஆம் ஆண்டின் இறுதியில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட 1,687 தொழில் முயற்சிகளின் மொத்த முதலீடு ரூபா 87,574 மில்லியனாக இருந்தது. இம் முதலீடுகள் புடைவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், இரசாயனப் பொருட்கள், பெற்றோலி யம், இறப்பரும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்க ளும், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், மற்றும் உணவு, குடிபானவகை, புகையிலை போன்ற வகைகளில் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

**வரைபடம் 4.5**
**முதலீட்டுச் சபையின் அடையப்பட்ட முதலீடுகள்**




## 4.6 கைத்தொழில் துறைக்கான கொடுகடன் கிடைப்பனவு

தனியார்துறையினருக்கு சார்பு ரீதியில் குறைந்த வட்டி வீதத்தில் நிதியங்களின் கிடைப்பனவு 1997 இல் அதிகரித்தது. நேரடிக் கடன்கள் மற்றும் பங்குடைமைப் பங்கேற்பு என்பனவற்றின் வடிவில் இரு முக்கிய அபிவிருத்தி வங்கிகளும் வர்த்தக வங்கிகளும் கைத்தொழில் துறைக்கு தொடர்ந்தும் நிதி வசதிகளை வழங்கின. தேசிய சேமிப்பு வங்கி யும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியும் 1996 இல் ஒப்புதல் வழங்கிய ரூ.10,844 மில்லியனுக்கு எதிராக 1997 இல் மொத்தம் ரூ. 15,575 மில்லியன் கடன்களுக்கு ஒப்புதல் வழங்கின. இது முன்னைய ஆண்டைவிட 44 சதவித அதிகரிப் பைக் காட்டுகின்றது.நேரடிக் கடன் உதவிகளின் கீழ் இவ்விரு வங்கிகளினாலும் ஒப்புதல் வழங்கப் பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 1996 இன் 577 இலிருந்து 1997 இல் 1,070 இற்கு 85 சதவீதத் தினால் அதிகரித்து முதலீட்டாளர் நம்பிக்கையில் மேம்பாடொன்றினைப் பிரதிபலித்தது. நேரடிக் கடன்கள் மற்றும் மேலதிகப்பற்றுக்கள் என்பன வற்றின் வடிவில் வர்த்தக வங்கிகளும் கைத்தொழில் துறைக்குத் தொடர்ந்தும் நிதி உதவிகளை வழங்கின. ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கைத்தொழில் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள் திசெம்பர் இறுதியின் ரூ.25.7 பில்லியனிலிருந்து 1997 செத்தெம்பர் இறுதியில் ரூ.25.4 பில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. 1997 இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கைத்தொழில் கடன்களின் வளர்ச்சி வீதம் 12.3 சதவீதமாக இருந்தது.


நேரடி நிதி வசதிகளின் கீழ் 1996 இன் ரூபா 7401 மில்லியன் கொண்ட 240 செயற்றிட்டங்களுக்கு

**வரைபடம் 4.6**

**ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபை செயற்றிட்டங்கள்**


**வரைபடம் 4.6.1**

**ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்கள்**




**வரைபடம் 4.6.2**

**ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீடுகள்**




எதிராக 1997 இல் தேசிய அபிவிருத்தி வங்கி ரூபா 11,647 மில்லியன் கொண்ட 733 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியது. ஒப்புதல் வழங்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பையும் மொத்தக் கடன் ஒப்புதல்களின் 57 சதவீத அதிகரிப்பையும் இது காட்டியது. மேலதிகமாக ரூபா 418 மில்லியன் பங்குடைமையினை வழங்கி தேசிய அபிவிருத்தி வங்கி 8 செயற்றிட்டங்களில் பங்கேற்றது. இந்தக் கடன்களின் பாரிய பங்கொன்று இரசாயனம், பெற்றோலியம் இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள், உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திப் பொருட்கள், புடவை அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றிற்கானதாக இருந்தது.

1996 இல் வீழ்ச்சியடைந்த டீ.எப்.சீ.சீ. வங்கியினது கைத்தொழில் கொடுகடனும் பங்குடமைப் பங்கேற்பும் 1997 இல் கணிசமாக அதிகரித்தது. 1996 இன் ரூ. 2,076 மில்லியன் செலவினைக்

**அட்டவணை 4.12**

**தேசிய அபிவிருத்தி வங்கியினாலும், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினாலும் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட நிதியியல் வசதிகள் – 1997 (அ)**

| வகை | தே. அ. வ. | | | | | | இ. அ. நி. கூ. | | | | | | முழு மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நேரடி நிதியியல் உதவி | | பங்கு மூலதன | | மொத்தம் | | ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் | | பங்கு மூலதனம் | | மொத்தம் | | | |
| | எண் | தொகை (ரூ.மில்.) | எண் | தொகை (ரூ.மில்.) | எண் | தொகை (ரூ.மில்.) | எண் | தொகை (ரூ.மில்.) | எண் | தொகை (ரூ.மில்.) | எண் | தொகை (ரூ.மில்.) | எண் | தொகை (ரூ.மில்.) |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 71 | 1,656 | - | - | 71 | 1,656 | 98 | 1,165 | 1 | 110 | 99 | 1,275 | 170 | 2,931 |
| 2 புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 56 | 574 | 1 | - | 57 | 574 | 68 | 526 | 1 | - | 69 | 526 | 126 | 1,100 |
| 3 மர, மர உற்பத்திகள் | 27 | 74 | - | - | 27 | 74 | 22 | 57 | 1 | 20 | 23 | 77 | 50 | 151 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 11 | 199 | - | - | 11 | 199 | 27 | 265 | 1 | - | 28 | 265 | 39 | 464 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 159 | 3,472 | - | 50 | 159 | 3,522 | 50 | 646 | - | - | 50 | 646 | 209 | 4,168 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | - | - | - | - | - | - | 12 | 110 | - | - | 12 | 110 | 12 | 110 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 2 | 15 | - | - | 2 | 15 | 1 | 27 | - | - | 1 | 27 | 3 | 42 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்கு வரத்துக் கருவிகளும் | - | - | - | - | - | - | 59 | 584 | - | - | 59 | 584 | 59 | 584 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 407 | 5,657 | 7 | 368 | 414 | 6,025 | - | - | - | - | - | - | 414 | 6,025 |
| மொத்தம் | 733 | 11,647 | 8 | 418 | 741 | 12,065 | 337 | 3,380 | 4 | 130 | 341 | 3,510 | 1,082 | 15,575 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
தேசிய அபிவிருத்தி வங்கி

கொண்ட மொத்தம் 338 செயற்றிட்டங்களுக்கு எதிராக 1997 இல் டீ.எப்.சீ.சீ. வங்கி ரூ. 3,380 மில்லியன் செலவினைக் கொண்ட 337 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. ரூ. 130 மில்லியன் பெறுமதியுடைய பங்குடைமையை வழங்கியதன் மூலம் டி.எப்.சீ.சீ. வங்கி 4 செயற்றிட்டங்களில் பங்கேற்றது. இவ்வசதிகளின் பெரும்பங்கு உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் மற்றும் இரசாயன, பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் ஆகியவற்றுக்குச் சென்றது)

## 4.7 கைத்தொழிற் கொள்கை

1994 இல் அறிவிக்கப்பட்ட தனியார்துறை முன்னணி வகிக்கும் ஏற்றுமதிசார்ந்த கைத்தொழில் மயமாக்கல் உபாயத்தினை அரசாங்கம் தொடர்ந்தும் வலுப்படுத்தியது. இக் கொள்கையின் முதன்மை நோக்கங்களாக கைத்தொழில் தளத்தினை விரிவாக்கி, பன்முகப்படுத்தி, தரமுயர்த்தி, பௌதிக மற்றும் மனிதவலு மூலவளங்களின் முகாமைத்துவத்தினை வினைத்திறன் மிக்கதாக்குதல், புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், மற்றும் வருமான மட்டங்களை உயர்த்துதல், ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் பிராந்திய மட்டத்தில் கைத்தொழில் மயமாக்கலை மேம்படுத்துதல் என்பன விளங்கின.

தனியார்துறையை வளர்ச்சியின் எந்திரமாக கைத்தொழில் கொள்கை அங்கீகரித்துள்ளமையின் காரணமாக கைத்தொழில்துறை தொடர்பான கொள்கைகளின் வடிவமைப்பிலும் நடைமுறைப்படுத்தலிலும் அவர்களது பங்கேற்பு ஊக்குவிக்கப்பட்டது. இது தொடர்பாக கைத்தொழில் மதியுரைக்குழுவின் ஒன்பது அபிவிருத்தி மீளாய்வு ஆணைக்குழுக்கள் 1997 இல் நிறுவப்பட்டன. அரசதுறை, தனியார்துறை, மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்தான அனுபவம் வாய்ந்த அலுவலர்களை உள்ளடக்கிய இக் குழுக்களிடம் கொள்கை வடிவமைப்பு அடையாளம் கண்டு திட்டமிடுதல், பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதலும் அரசிற்கு மதியுரை வழங்குதலும், வேலைகளை நிகழ்ச்சித்திட்டப்படுத்துதல், ஏற்கனவேயுள்ள கொள்கைகளின் செயலாற்றத்தினை ஆய்வு செய்தல் மற்றும் புதிய கொள்கை மாற்றங்களை விதந்துரைத்தல் ஆகிய பொறுப்புக்கள் இவற்றிடம் ஒப்படைக்கப்பட்டன. தீர்வை அமைப்பினை மேலும் ஒழுங்குமுறைப்படுத்துதல் தற்போதுள்ள உள்நாட்டுத் தயாரிப்புக் கைத்தொழில்களையும் அவற்றின் விரிவாக்கத்தையும் பாதிக்கின்ற விடயங்களை கவனிப்பதற்காகவும் சனாதிபதி வர்த்தக மற்றும் தீர்வை ஆணைக் குழுவொன்று 1997 இல் நிறுவப்பட்டது. கைத்தொழில்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள ஊக்குவிப்புத் திட்டங்களைப் பரிசோதிப்பதற்குப் பொறுப்பான அதிகாரங்களும் இவ்வாணைக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேம்பட்ட வர்த்தக உட்கட்டமைப்பு வசதிகள் போதாமல் இருப்பது நாட்டின் கைத்தொழில்களின் வளர்ச்சியையும் பரம்பலையும் தடுக்கின்ற முக்கிய காரணிகளிலொன்றாக இருந்து வருகின்றது. இதனைப் பொறுத்தவரை கட்டு தொழிற்படுத்து சொந்தமாக்கு/ கட்டு தொழிற்படுத்து மாற்றல் செய் என்ற அடிப்படையில் வெப்ப மற்றும் நீர் மின்வலு உருவாக்கம், தொலைத் தொடர்பூட்டல், துறைமுக அபிவிருத்தி நெடுஞ்சாலைகள் மற்றும் கைத்தொழில் பேட்டைகள் மற்றும் கைத்தொழில் நகரங்கள் போன்ற வர்த்தக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் தனியார்துறையின் ஈடுபாடுகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டது. புதிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதும் ஏற்கெனவேயுள்ள உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதும் புதிய முதலீடுகளைக் கவருவது மட்டுமன்றி, உற்பத்திச் செலவினைக் குறைத்து அதன் மூலம் உள்நாட்டு உற்பத்திகளின்வெளிநாட்டுப் போட்டித் தன்மையினையும் உயர்த்தக் கூடியதாகவும் இருக்கும்.

இறக்குமதி செய்யப்பட்ட புடவைகள் மற்றம் அதனுடன் தொடர்பான பொருட்களின் மீதான உயர்ந்த தீர்வைகள், வரிகள் மற்றும் ஏனைய விதிப்புக்கள் அத்துடன் பல்வேறுபட்ட சுங்க நடைமுறைகள் என்பன தயாரிப்பாளர்களுக்கு குறிப்பாக இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களில் பெருமளவிற்கு தங்கியிருக்கும் ஏற்றுமதிசார்ந்த ஆடைக் கைத்தொழிலில் தயாரிப்பாளர்களுக்கு இடர்பாடுகளைத் தோற்றுவித்துள்ளன. இதன் விளைவாக அரசாங்கம் 1998 வரவு செலவுத் திட்டத்தில் ஆடைக் கைத்தொழிலுக்கான புடவைகள் மற்றும் அதனுடன் தொடர்பான மூலப் பொருட்களின் மீதான தீர்வையினை ஒழித்தது. இதன்படி, 1997 நவெம்பரிலிருந்து நூழிழை சீத்தைத் துணி, மற்றும் அதனுடன் தொடர்பான அனைத்து இடைநிலை மற்றும் மூலதனப் பொருட்களுக்குமான இறக்குமதி தீர்வை நீக்கப்பட்டது. இம் மாற்றம் சுங்கத்தாமதங்கள், கள்ளக்கடத்தல் மற்றும் பொருள் பட்டியல் பெறுமதியைக் குறைத்துக்காட்டுதல் என்பனவற்றை ஒழிப்பதுடன் ஏற்றுமதிக்காக செலவிடும் நேரத்தையும் குறைக்கிறது. புடவைக் கைத்தொழிலின் தாராளமயமாக்கல் உள்நாட்டுச் சந்தைசார்ந்த புடவைக் கைத்தொழிலின்

தரத்தையும் போட்டித் தன்மையையும் கூட மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கைத்தொழில் துறைக்கான ஊக்குவிப்புக்கள்

அரசாங்கம் அதன் கைத்தொழிற் கொள்கைகளின் பிரகடனப்படுத்தப்பட்ட குறிக்கோள்களை அடையும் பொருட்டு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் ஆகிய இருசாராருக்கும் தொடர்ந்து ஊக்குவிப்புக்களை வழங்கியது. கடந்த காலத்தில் பெரும்பாலான ஊக்குவிப்புக்கள் சிறப்பாக முதலீட்டுச்சபைக் கைத்தொழில் முயற்சிகளுக்கே வழங்கப்பட்ட போதும் அண்மையில் அரசாங்கம், முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லாத் துறைகளுக்கு சமமான ஊக்குவிப்புக்களை படிப்படியாக வழங்கவேண்டியதன் அவசியத்தை அங்கீகரிக்கின்ற விதத்தில் முதலீட்டுச் சபையல்லாத் தொழில் முயற்சிகளுக்கும் ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.

மின்னியல் உடற்கோப்புக்களுக்கான மின்னியல் மற்றும் கூறுகள், மட்பாண்டம் மற்றும் கண்ணாடிப் பொருட்கள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்,மென் மற்றும் பாரிய பொறியியல் கைத்தொழில்கள், இரத்தினக்கற்களை வெட்டலும் பட்டைதீட்டலும், வைரங்கள் மற்றும் ஆபரணத் தயாரிப்பு போன்ற குறிப்பிட்ட கைத்தொழில்கள் புதிய முதலீடுகளைக் கவருவதற்கான உந்து கைத்தொழில்களாக இனங்காணப்பட்டுள்ளன. ஆகக் குறைந்தது ரூ.50 மில்லியன் மூலதனத்துடன் குறித்துரைக்கப்பட்ட வலயங்களில் நிறுவப்பட்டு 50 புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குகின்ற அத்தகைய கைத்தொழில்களுக்கு முதலீட்டுச் சபையின் ஏனைய ஊக்குவிப்புக்களுடன் 10 ஆண்டு வரி விடுப்பும் வழங்கப்பட்டிருக்கின்றது. உந்து கைத்தொழில் வகையின் கீழ்வரும் ஏற்கெனவேயுள்ள முதலீட்டுச் சபையல்லாத் தொழில் முயற்சிகளுக்கு நவீனமயப்படுத்தலுக்கான பொறிகளையும் பொறித் தொகுதிகளையும் இறக்குமதி செய்ய தீர்வையற்ற சலுகைகளும் ஏற்றுமதி சதவீதத்தினைப் பொறுத்து 5 தொடக்கம் 10 ஆண்டுகள் வரி விடுப்பும் வழங்கப்பட்டன. 5 ஆண்டு காலப்பகுதிக்குள் 50 சதவீத ஏற்றுமதிகளை அடையும் கைத்தொழில் முயற்சிகளுக்கு 5ஆண்டுகால வரிவிடுப்பு வழங்கப்பட்ட வேளையில் 90 சதவீதமான ஏற்றுமதிகளை அடைந்த கைத்தொழில்களுக்கு முதலீட்டுச் சபையின் முழுமையான தகைமைகளுடன் 10 ஆண்டுகால வரிவிடுப்பு வழங்கப்பட்டது. வெளிப்படுத்தப்படாத தமது ஒன்று சேர்ந்த வருமானத்தினை உந்து கைத்தொழில்களில் முதலிடு செய்பவர்களுக்கு வரி/செலாவணிக்கட்டுப்பாட்டு மன்னிப்புக்களை வழங்குவதற்கும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தங்கம், இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழில் பெருமளவு தொழில் வாய்ப்புக்களையும் ஏற்றுமதி வருமானத்தினையும் பெற்றுக் கொள்வதில் பெருமளவு உள்ளார்ந்த வளங்களையும் கொண்டுள்ளமையினால் வருமானவரி, மற்றும் தேசிய பாதுகாப்பு தீர்வை என்பனவற்றிலிருந்தான விலக்கல், இரத்தினக்கற்களையும் தங்கத்தையும் தீர்வையின்றி இறக்குமதி செய்தல் என்பன உள்ளிட்ட ஊக்குவிப்புத் தொடரொன்று 1998 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

புடவைக் கைத்தொழில்களின் தாராளமயமாக்கல் ஏற்கெனவேயுள்ள புடவைக் கைத்தொழில்களின் உயர்ந்த செலவுக்கான அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளது. இக் கைத்தொழில்கள் புடவை இறக்குமதிகளின் மீதான உயர்ந்த தீர்வை மூலமான சந்தைப்பாதுகாப்பு, சலுகை அடிப்படையிலான கொடுகடன், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஆடைகளுக்கு மொத்த வரி விலக்கல் போன்ற சலுகைகளைக் கடந்த காலத்தில் அனுபவித்தபோதும் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகளைக் காட்டவில்லை. இத்துறையின் செயலாற்றத்தினை மேம்படுத்துகின்ற நோக்குடன் கூடியளவு வினைத்திறனையும் போட்டித் தன்மையையும் கொண்ட கைத்தொழிலை நோக்கமாகக் கொண்ட புதிய தொழில்நுட்ப உருவாக்கத்தினை அறிமுகப்படுத்துவதற்காக புடவைக் கைத்தொழில் மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1997 இல் அரசாங்கம் ஊக்குவிப்புப் பொதியொன்றினை வழங்கியது. இம் மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், ஒன்று சேர்ந்த வட்டியுடன் சேர்ந்து வெளிநிற்கும் அனைத்துக் கடன்களையும் மாற்றல் செய்வதற்காக புடவைப்படுகடன் மீட்சி நிதியமொன்று ஏற்படுத்தப்பட்டது. படுகடன் சுமை, நிதியத்திற்கு மாற்றல் செய்யப்படுகின்றமையால் தொழில் முயற்சிகள் மாற்றல் செய்யப்பட்ட அத்தகைய தொகைகளின் மீதான ஒன்று சேர்ந்த வட்டியை மீளச் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகா. எனினும் புடவைப் படுகடன் மீட்சி நிதியத்திற்கு மொத்தப்படுகடனானது மாற்றல் செய்யப்பட்ட நாளிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டு சலுகைக் காலத்திற்குப் பின்னர் மூலதனமயமாக்கப்பட்ட ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலான முதல் தொகையை தயாரிப்பாளர்கள் வங்கிக்கு செலுத்த பொறுப்புடையவர்களாவர். படுகடனின் தொகையைப் பொறுத்து அத்தகைய படுகடனை மீளச் செலுத்த வழங்கப்பட்ட ஆகக் கூடிய காலம் ஏழு ஆண்டுகளாக வரையறுக்கப்பட்டிருக்கும். புடவைப்படுகடன் மீட்சி நிதியத்திற்கு படுகடன் மாற்றல் செய்யப்பட்டதைத்

தொடர்ந்து தொழில் முயற்சியாளர்கள் முன்னைய கடனுக்கான பிணையாக ஏற்கனவே சமர்ப்பித்த பிணைகள்/ஈடுகளுக்கெதிராக கைத்தொழில்களை நவீனப்படுத்துவதற்கும் மீளவமைப்பதற்குமான புதிய நிதி உதவிகளைப்பெற்றுக் கொள்ள முடியும். மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்தது ரூ. 5 மில்லியன் மேலதிக முதலீடு செய்யப்பட்டிருப்பதுடன் மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டம் வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்டிருக்குமாயின் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்றுமதிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற பொறுப்புக்கள் எதுவுமின்றி அத்தகைய தொழில் முயற்சிகளுக்கு முதலீட்டுச் சபை அந்தஸ்து வழங்கப்படும். மேலும் மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட உள்ளூர் புடவைத் தயாரிப்பாளர்களிடமிருந்து பள்ளிக்கூட சீருடைகள், படை ஆளணியினருக்கான சீருடைகள், நலத்துறைக்கான பன்டேஜ் துணிகள் மற்றும் கையுறை போன்றவற்றின் உற்பத்தி பன்னாட்டுச் சந்தைகளுக்கான தரத்தினை அடையும்வரை 1999 சனவரியிலிருந்து கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. இந் நோக்கத்திற்காக அரச நிறுவனங்களின் துணித் தேவைகளை மதிப்பிடுவதற்கும், அனுமதிப்பங்கு அடிப்படையில் ஒதுக்குகள் மேற் கொள்ளப்பட வேண்டிய தயாரிப்புக்களை அடையாளம் காணுவதற்குமாக உள்நாட்டு புடவை ஒதுக்கீட்டுக் குழுவொன்று ஏற்படுத்தப்படும். வெளிநின்ற ஊ.சே.நிதியம் மற்றும் ஊ.ந.நிதிய நிலுவைகளை மீள அட்டவணைப்படுத்த அனுமதிக்கப்பட்ட வேளையில் வெளிநின்ற தொலைபேசிக் கட்டணங்களின் மீதும் சலுகைகள் வழங்கப்படும். மேலும் தயாரிப்பாளர்களுக்கு வரவேண்டிய மொத்த விற்பனை வரி மீளளிப்புக்கள் உடனடியாக விடுவிக்கப்படும்.

1997 நவெம்பரில் 1998 வரவு செலவுத் திட்டம், பிரதேச மட்டத்தில் கைத்தொழில் பரம்பலை ஊக்குவிக்கும் நோக்குடன் பாகுபாடான ஊக்குவிப்பு அமைப்பொன்றினை அறிமுகப்படுத்தியது. இதன் படி, வர்த்தகத் தொழிற்பாட்டிலுள்ள முதலீட்டுச் சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லா தொழில் முயற்சிகள் இரண்டும் "கடினப்பிரதேசம்" அல்லது "மிகக் கடினப் பிரதேசம்" எனக் குறித்துரைக்கப்பட்ட வலயத்தில் 1998 திசெம்பர் 31இற்கு முன்னர் விரிவாக்க அல்லது கைத்தொழில்களை மீளத் தொடக்கி குறைந்தது 150 பேருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கி வெளியீட்டில் குறைந்தது 50 சதவீதத்தினை ஏற்றுமதி செய்யுமிடத்து அம் முயற்சிகள் முதலீட்டுச் சபையினரால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களைப் பெறதகைமையுடையனவாக இருக்கும். ஆடைக் கைத்தொழில்களைப் பொறுத்தவரை, குறைந்த ஏற்றுமதித் தேவைப்பாடு வெளியீட்டில் 90 சதவீதமாகும். எனவே ஏற்கெனவேயுள்ள தொழில் முயற்சிகள் "கடினப் பிரதேசம்" அல்லது "மிகக் கடினமான பிரதேசத்தில்" உள்ள வலயத்தில் விரிவாக்க அலகினை அல்லது கைத்தொழிலை மீள அமைக்கின்றவிடத்து அவை முதலீட்டுச் சபையின் மற்றைய ஊக்குவிப்புடன் முறையே 5 மற்றும் 8ஆண்டு வரி விடுப்புக் காலங்களுக்கும் உரித்துடையனவாகும். 1998இன் வரவு செலவுத் திட்ட எடுத்துரைப்பு தற்பொழுது கடினமான அல்லது மிகக் கடினமான பிரதேசங்களில் தொழிற்சாலைகளை அமைத்துள்ள முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகள் அதே இடங்களில் ஆடைக் கைத்தொழிலுக்கான ஆடைத்துணை உற்பத்திகள் அல்லது அதனுடன் தொடர்பான ஏனைய விடயங்களின் தயாரிப்புக்களையும் மேம்பட்ட தொழில் நுட்பங்களுடன் கூடிய சிறப்பியல்பு வாய்ந்த பயிற்சி நிலையங்களையும் விரிவாக்கம் செய்யுமிடத்து அத்தகைய கைத்தொழில்கள் 1998 திசெம்பர் 31இற்கு முன்னர் தொடங்கப்பட்டு 100 பேருக்கு தொழில் வாய்ப்புக்களையும் அதிகரிக்குமாயின் அவற்றிற்கு மேலதிகமாக 5 ஆண்டு வரிவிடுப்பும் மற்றைய ஊக்குவிப்புக்களும் வழங்கப்படுவதற்கு 1998 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டம் முன்மொழிந்தது.

1996 வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒப்புதலளிக்கப்பட்ட பொறித் தொகுதி மற்றும் கருவிகளின் இறக்குமதி மீதான தீர்வை மற்றும் மொத்த விற்பனை வரித் தளர்த்தல்கள் அதிகரிக்கும் இலாபங்களின் மீது ஐந்தாண்டுக் காலத்திற்கு வரிவிலக்கல், முன்னேற்றம் கண்ட தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துகின்ற கைத்தொழில்களுக்கு இவ்வசதிகளை மேலும் இரண்டாண்டு காலத்திற்கு நீடித்தல் என்பனவற்றை உள்ளடக்கிய இறை ஊக்குவிப்புத் திட்டத்தினை அரசு தொடர்ந்தும் மேற்கொண்டது. இத்திட்டம், ரூ.4 மில்லியனுக்கு மேல் முதலீடு செய்கின்ற புதிய தொழில் முயற்சிகளுக்கும் ஏற்கெனவேயுள்ள ரூ.1 மில்லியன் முதலீடுகளைக் கொண்ட தொழில் முயற்சிகளுக்கும் முன்னேற்றம் கண்ட தொழில் நுட்பத்திற்காக ஒப்புதலளிக்கப்பட்ட பொறிகளையும் கருவிகளையும் இறக்குமதி செய்யவும் தீர்வையின்றி அனுமதித்தது. இத் திட்டத்தின் கீழ் 1997 இறுதியில் ரூ.9,482 மில்லியன் மொத்த முதலீட்டுப் பொறுப்புக்களைக் கொண்ட 106 புதிய தொழில் முயற்சிகளுக்கும் ரூ.20,179 மில்லியன் மொத்த முதலீட்டுப் பொறுப்புக்களைக் கொண்ட ஏற்கனவேயுள்ள 317

தொழில் முயற்சிகளுக்கும் ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. இச் செயற்றிட்டங்கள் ஏறத்தாழ 25,950 பேருக்கு நேரடித் தொழில் வாய்ப்புக்க ளையும் ஏறத்தாழ 54,650 பேருக்கு மறைமுகத் தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1997 இறுதியில் இச் செயற்றிட்டங்களில் 216 ரூ.6,600 மில்லியன் மொத்த முதலீட்டுச் செலவில் பொறித் தொகுதிகளையும் கருவிகளையும் இறக்குமதி செய்திருப்பதுடன் 6,739 பேருக்கு நேரடித் தொழில் வாய்ப்புக்களையும் மேலும் 13,476 பேருக்கு மறைமுக தொழில் வாய்ப்புக்களையும் வழங்கியிருக்கின்றன.

உற்பத்திச் செலவில் தொழிலாளர் செலவு குறிப்பிடத்தக்க விகிதத்திற்கு வகை கூறுவதனால் பன்னாட்டுப் போட்டித் தன்மையைக் கொண்டிரு க்கும் பொருட்டு தொழிலாளர் உற்பத்தியாற்றலை மேம்படுத்துவதன் மூலமாக தொழிலாளர் செலவுக் கூறினைக் குறைப்பது அவசியமாக மாறியுள்ளது. 1996ஆம் ஆண்டு உற்பத்தியாக்க ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் 1997 இலிருந்து 2006 வரையான காலப்பகுதி உற்பத்தியாக்க தசாப்தமா கக் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு தொழிலாளர் பங்கேற்பு நுட்பங்களை பிரபல்யப்படுத்துவதற்கும் உற்பத்தியா க்கத்தினை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உணர்த்துவதற்குமாக இவ்வாண்டில் சிறப்புக் கவனத்தைச் செலுத்தியது. இதுதொடர்பு ஊடகங் கள் மூலமாக மேம்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் 51 சிங்கள, 52 ஆங்கில நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய 103 அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் கிரமமான அடிப்படையில் ஒலிபரப்பப்பட்டன. தேசிய உற்பத்தியாக்க தசாப்த நிகழ்ச்சித் திட்ட மானது உற்பத்தியாக்க மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபாடு கொள்ளும் விதத்தில் அனைத்து அரசதுறை அமைப்புக்களையும் ஊக்குவித்தது. அமைச்சுக்களின் செயலாளர்களுடன் நடத்தப்பட்ட பல கூட்டங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அமைப்புக்களில் உற்பத்தியாக்க நிலையங்களை ஏற்படுத்துவதற்காக இணைப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

## 4.8 கைத்தொழில் அமைவு

நாட்டிலுள்ள தனியார்துறைக் கைத்தொழில் களில் பெரும்பாலானவை மேல் மாகாணத்தில் முக்கியமாக கொழும்பு, கம்பகா மாவட்டங்களில் அமைந்துள்ளமைக்கு சார்பு ரீதியில் சிறந்த உட்கட்ட மைப்பு வசதிகள் காணப்படுவதும் துறைமுகத்திற்கு அண்மையில் அமைந்துள்ளமையுமே காரணமாகும். முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழும் இருநூறு ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் 1997 இல் பதிவு செய்யப்பட்ட 1,228 தொழில் முயற்சிகளில் 69 சதவீதம் அல்லது 844 தொழில் முயற்சிகள் கொழும்பு, கம்பகா மாவட்டங்களில் அமைந்துள்ளன. அதே வேளை கைத்தொழில் அபிவிருத்தி அமைச் சின் கீழ் பதிவு செய்யப்பட்ட 1,684 மொத்தத் தொழில் முயற்சிகளில் 1,461 தொழில் முயற்சிகளும் இவ்விரு மாவட்டங்களிலேயே அமைந்திருந்தன. கைத்தொழில்களைப் பன்முகப்படுத்த வேண்டிய

**அட்டவணை 4.13**

**உயர்தொழில் நுட்ப ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட செயற்றிட்டங்கள் 1997 (அ)**

| வகை | புதிய | | | நடைமுறையிலுள்ள | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | முதலீடு ரூ. மில். | உள்ளார்ந்த தொழில் நிலை | எண்ணிக்கை | முதலீடு ரூ. மில். | உள்ளார்ந்த தொழில் நிலை | எண்ணிக்கை | முதலீடு ரூ. மில். | உள்ளார்ந்த தொழில் நிலை |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 18 | 2,079 | 1,338 | 49 | 5,042 | 2,657 | 67 | 7,121 | 3,995 |
| 2 புடவைகள், அணியும்ஆடைகள் தோல் உற்பத்தி | 13 | 705 | 1,007 | 38 | 1,799 | 2,532 | 51 | 2,504 | 3,539 |
| 3 மர மர உற்பத்திகள் | 4 | 190 | 372 | 8 | 199 | 505 | 12 | 389 | 877 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 7 | 389 | 598 | 26 | 1,212 | 1,250 | 33 | 1,601 | 1,848 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 26 | 1,180 | 1,512 | 93 | 4,778 | 4,940 | 119 | 5,958 | 6,452 |
| 6 உலோமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 5 | 1,317 | 398 | 7 | 263 | 645 | 12 | 1,580 | 1,043 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 3 | 899 | 619 | 14 | 908 | 840 | 17 | 1,807 | 1,459 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 8 | 539 | 622 | 46 | 2,263 | 2,151 | 54 | 2,802 | 2,773 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்புகள் | 15 | 1,703 | 1,611 | 16 | 637 | 625 | 31 | 2,340 | 2,236 |
| 10 பணிகள் | 7 | 481 | 344 | 20 | 3,078 | 1,384 | 27 | 3,559 | 1,728 |
| மொத்தம் | 106 | 9,482 | 8,421 | 317 | 20,179 | 17,52[illegible] | 423 | 29,661 | 25,950 |

மூலம் : கைத்தொ[illegible]ல் அபிவிருத்தி அமைச்சு

(அ) தற்காலிகமானவை

தேவை இனங் காணப்பட்டுள்ளமையினால் கைத்தொழில்களைப் பிரதேசமயப்படுத்துவதனை ஊக்குவிப்பதற்கான பல முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவையாவன இருநூறு ஆடைத் தொழிற்சாலைகள் நிகழ்ச்சித் திட்டம், தென்மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பிரதேச கைத்தொழில் பூங்கா மற்றும் கைத்தொழில் நகர நிகழ்ச்சித் திட்டம், மற்றும் கைத்தொழில்களின் பிரதேச மயமாக்கலை நோக்கமாகக் கொண்ட பல்வேறு இறை மற்றும் நிதியியல் ஊக்குவிப்புக்கள் என்பனவாகும்.

இருநூறு ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், 1997 திசெம்பர் இறுதியில் 21 மாவட்டங்களில் 164 ஆடைத் தொழிற்சாலைகள் வர்த்தக உற்பத்தியிலீடுபட்டிருந்தன. இந்த 164 தொழிற்சாலைகளில் 86 சதவீதம் அல்லது 142 தொழிற்சாலைகள் கொழும்பு, கம்பகா மாவட்டங்களுக்கு வெளியிலேயே நிறுவப்பட்டுள்ளன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, மற்றும் பொலனறுவை போன்ற மிகக் கடினமான மாவட்டங்களில் தொழிற்சாலைகளை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையே யாகும். 1997 திசெம்பர் இறுதியில் இரத்தினபுரி மாவட்டத்தில் 16 தொழிற்சாலைகளும் அநுராதபுர மாவட்டத்தில் 14 தொழிற்சாலைகளும் புத்தளம் மாவட்டத்தில் 12 தொழிற்சாலைகளும் காணப் பட்டன.

கைத்தொழிற் பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நாடு முழுவதும் பரந்துபட்டுள்ள 1,864 ஏக்கர்களை உள்ளடக்கியுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டம் சீதவாக்கவிலும், மத்துகமவிலும் பன்னாட்டுத் தரத்திலமைந்துள்ள இரு கைத் தொழில் பூங்காக்களையும் 25 பிரதேச கைத்தொழில் பேட்டைகளையும் உள்ளடக்கியுள்ளது. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின்படி இந் நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள உள்ளார்ந்த தொழில் வாய்ப்பு ஏறத்தாழ 100,000 பேராகும். சீதவாக்க கைத்தொழில் பேட்டை தொடர்பான கட்டடவாக்க வேலைகளில் பெரும்பாலானவை தற்பொழுது முற்றுப் பெற்றுள்ளதுடன் 1998 இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இக் கைத்தொழிற் பேட்டை 400 ஏக்கர் கொண்ட மொத்தப் பிரதேசத்தை உள்ளடக்கி 70 கைத்தொழில் அலகுகளை நிறுவுவதற்கான வசதிகளை வழங்குவதுடன் 20,000 பேருக்கு நேரடித் தொழில் வாய்ப்புக்களையும் வழங்கும். மத்துகமவில் பல்லேகொட என்ற இடத்தில் 250 ஏக்கரில் கைத் தொழிற் பேட்டையை அமைப்பது தொடர்பான சாத்திய வள வேலைகள் 1997 இல் ஆரம்பமாகியது. பிரதேச கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள 447 ஏக்கர் நிலத்தினை உள்ளடக்கிய 10 சிறு கைத்தொழிற் பேட்டைகள் தொடர்பான பௌதிக அபிவிருத்தி வேலைகள் 1997 இல் தொடங்கியதுடன், இது 22,500 பேருக்கான நேரடித் தொழில் வாய்ப்புக்களையும் கொண்டிருக்கிறது. கரந்தெனியா, உடுவக்க, தங்கொட்டுவ, மகதுற, குருவிட்ட, மினுவாங்கொடை, மற்றும் பெலியத்தை ஆகிய கைத்தொழிற் பேட்டைகளில் பல கைத்தொழிலாளர்கள் கட்டட வேலைகளை அல்லது வர்த்தக உற்பத்திகளை ஆரம்பித்துள்ளனர்.

தென் பகுதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை தென் பகுதியில் தனியார் துறையினரின் பாரிய, நடுத்தர, மற்றும் சிறிய அளவு கைத் தொழில்களை நிறுவுவதற்கும் முதலீட்டாளர்கள், தொழில் முயற்சியாளர்களை அனுமதிப்பதற்கும் வியாபாரங்களை நிறுவுவதற்கும் ஊக்குவிப்புக்களை வழங்கியது. 1997 திசெம்பரில் ஏறத்தாழ 91 தொழில் முயற்சிகள் வர்த்தகத் தொழிற்பாட்டிலும் 265 தொழில் முயற்சிகள் நடைமுறைப்படுத்தலிலும் மற்றும் பேச்சு வார்த்தைகளின் பல்வேறு கட்டங்களிலும் காணப்பட்டன.